Registered as a News Paper in Sri Lanka    பக்கங்கள்: 04    விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 01    பிரமோதூத வூ ஆனி மீ 18 ஆம் உ    திங்கட்கிழமை    (02 - 07 - 1990)    ஹிஜ்ரி 1410    ஜுல்ஹஜ் 8    ஓசை 134

Y.M.C.A வாசிகசாலை

## கொழும்பில் கைது செய்யப்பட்டவர் பணம் கொடுத்து விடுதலை பெற்றார்

(கொழும்பு)

கொழும்பில் இராணுவத்தினாலும், முகமூடிகளினாலும் கைது செய்யப்பட்ட இளைஞர்களை பணம் கொடுத்து விடுவிக்கக்கூடியதாக இருப்பதாக கொழும்பில் இருந்து வந்தவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

முகமூடியால் காட்டப்பட்டு இராணுவத்தினால்பிடித்துச்செல்லப்பட்ட தனது மகனை ஆயிரத்தி ஐந்நூறு ரூபா கொடுத்துத்தான் விடுதலை செய்ததாகவும் அவ்வாறு விடுதலை பெற்ற மகன் இவர்தான் எனவும் தனக்குப்பக்கத்தில் நின்ற மகனைத தாயார் காட்டினார். இம்மகனின் விடுதலைக்கு தனக்கு ஒருவழக்கறிஞர் உதவியதாகவும் தாயார் தெரிவித்தார்.

தனது மகன் வீட்டிலிருக்கும்போது கடந்த 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 12 மணியளவில் படுததிருந்த சமயம்

(4ஆம் பக்கம் பார்க்க)

# மன்னார்; புலிகள் படைகள் மோதல்

## பவல் கவசவாகனம் சேதம்; அதிகாரியும் சிப்பாய்களும் காயம்

(மன்னார்)

சிலாபத்துறையில் இருந்து முள்ளிக்குளம் நோக்கி வந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை மூண்டுள்ளது.

இச் சண்டையில் விடுதலைப் புலிகளின்தாக்குதலினால் சிறிலங்கா இராணுவத்திற்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இத் தாக்குதலின்போது பவல் வாகனம் மீது விடுதலைப் புலிகள் ஆர். பி. ஜி. தாக்குதல் மேற்கொண்டனர். இத்தாக்குதலால் பவல் வாகனம் சேதமடைந்தது. அத்தோடுநடந்து வந்த இராணுவம் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டதால் இராணுவத்தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. காயமடைந்த சிறிலங்கா இராணுவத்தினரை இரு தடவை ஹெலிகப்டர் ஏற்றிச் சென்றதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை முள்ளிக்குளப் பகுதியில் பொம்மர் குண்டு வீச்சினால் முள்ளிக்குளத்தில் பொதுமக்களின் உயிருக்கும் சொத்துகளுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

தற்பொழுதும் இப்பகுதியில் தொடர்ந்து சண்டை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது

இச் சண்டையில் விடுதலைப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### அ. தி. மு. க. பிரதமருக்கு தந்தி

## இனப்படுகொலைகளை தடுக்க நடவடிக்கை எடுக்கவும்

(சென்னை)

இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக நடத்திவரும் தாக்குதல் நடவடிக்கைகள் குறித்து இந்திய மத்திய அரசு தக்க கடும் நடவடிக்கையினை எடுக்கத் தவறியுள்ளதாக அனைத்திந்திய அ. தி. மு. கவும் இந்திய அரசை குற்றம் சாட்டியுள்ளது.

இலங்கை நடவடிக்கைகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றும் அவ்ரோ வந்தது!

(யாழ்ப்பாணம்)

அவ்ரோ விமானங்கள் நேற்றும் திடீரென யாழ்நகரை சுற்றியதனால் அப் பகுதிகளில் நின்ற மக்கள் வானை அண்ணாந்து பார்த்தவாறு தலைதெறிக்க ஓடித் தப்பினர்.

ஆனால் அவ் விமானங்கள் இரண்டுமுறை வட்டமிட்டு விட்டு எதுவித சேஷ்டையும் பண்ணாது சென்றுவிட்டன.

(லோ)

## சிறிலங்காவின் அனுதாபம் இது

(கொழும்பு)

மன்னார்ப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் நஞ்சு கலந்த உணவுப்பொருட்களை கைவிட்டுவிட்டு ஓடிவிட்டதாகவும் இவ் உணவுப்பொருட்களை அப்பாவித் தமிழ் மக்கள் உண்பதை தவிர்க்கும் பொருட்டு படையினர் அதனை அழித்துவிட்டதாகவும் சிறிலங்கா அரசு செய்தியொன்றில் தெரிவிக்கப்பட்டது.

## வடக்கிற்கு அனுபவமுள்ள விமானிகள்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளால் யாழ். கோட்டைக்குள் முற்றுகையிடப்பட்டுள்ள படையினருக்கு உணவு மருந்து வகைகளை வழங்கும் வகையில் அனுபவமிக்க இரண்டு விமானிகளை இலங்கை அரசு ஈடுபடுத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

# தமிழர் போருக்கு கடனாக உதவுக!

## விடுதலைப் புலிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கு எதிரான போரில் சிறிலங்கா சிங்கள அரசு கோடிக்கணக்கில் நிதி திரட்டி வருகிறது. தமிழ் மக்கள் தம்மைப் பாதுகாப்பதற்குத் தங்கள் பங்களிப்பைச் செலுத்த வேண்டாமா? கடன்மீளளிப்பு முறையில் உதவி செய்யும்படி விடுதலைப்புலிகள் தமிழ்ப் பொதுமக்களை வேண்டி விளக்கமாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழீழம் சிங்களத் தேசத்திற்கு எதிராகப் போராடுகிறது. சிங்களக் கடற்படை, சிங்கள வான்படை. சிங்கள தரைப்படை, சிங்களக் காவற்துறை, சிங்களக் காடையர்கள் படையுடனும் தமிழீழம் மோதுகிறது.

ஸ்ரீலங்காவின் பாதுகாப்புப் படைகளுக்கு ஏற்கெனவே பல கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. குறை நிரப்புத் திட்டத்தின் கீழ் மேலும் 500 கோடி ரூபாவை இலங்கை அரசு பாதுகாப்பு துறைக்காக ஒதுக்கியுள்ளது. தேசிய பாதுகாப்பு நிதி என்று கூறிக் கொண்டு சிங்கள இனவாதம் வளர்க்கப்படுகிறது. சிங்கள தேசம் தமிழீழ மக்களை அழிக்க முயல்கிறது.

சிங்கள மக்களின் பாதுகாப்பு என்னும் பேரில் சிங்கள தேசமே ஆயுதமயமாக்கப்படுகிறது.

தமிழீழ தேசியப்படை பல ஆயிரம் போராளிகளைஇன்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பணக்காரர் முதல் பரதேசி வரை பாதுகாப்பு நிதியுதவி

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு நிதிக்கு சிங்களமக்களில் பெரும்பணக்காரர் முதல் பிச்சைக்காரர் வரை பணஉதவி அளித்து வருவதாகக் கொழும்பில் இருந்து வரும்செய்திகள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா அரசு திரட்டும் தேசிய பாதுகாப்பு நிதிக்கு சிங்கள மக்கள் மனமுவந்து தாமாகவே முன்வந்து நிதி அளித்து வருகிறார்கள். இதனால ஸ்ரீலங்கா அரசின் தேசிய பாதுகாப்பு நிதிக்கு பெருமளவில் நிதிசேர்வதாகத் தெரிகின்றது. இந் நிதி முழுமையாக ஸ்ரீலங்காவின் ஆயுதப் படைகளுக்கே செலவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறிலங்கா படையில் சேர

## திருமலையில் தமிழர்

பலத்த சேதம் ஏற்பட்டுள்ள தாகத் தெரியவருகின்றது. இத் தாக்குதலின்போது பவல் வாகனம் மீது விடுதலைப் புலிகள் ஆர். பி. ஜி. தாக்குதல் மேற்கொண்டனர். இத்தாக்குதலால் பவல் வாகனம் சேதமடைந்தது. அத்தோடுநடந்து வந் 5 இராணுவம் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டதால் இராணுவத்தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. காயமடைந்த சிறிலங்கா இராணுவத்தினரை இரு தடவை ஹெலிகப்டர் ஏற்றிச் சென்றதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை முள்ளிக்குளப்

சொத்துகளுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

...கின்றது.

இச்சண்டையில் விடுதலைப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

... அனுபவமுள்ள விமானிகள்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளால் யாழ். கோட்டைக்குள் முற்றுகையிடப்பட்டுள்ள படையினருக்கு உணவு மருந்து வகைகளை வழங்கும் வகையில் அனுபவமிக்க இரண்டு விமானிகளை இலங்கை அரசு ஈடுபடுத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

... தரைப்படை, சிங்களக் காவற்துறை, சிங்களக் காடையர்கள் படையுடனும் தமிழீழம் மோதுகிறது.

ஸ்ரீலங்காவின் பாதுகாப்புப் படைகளுக்கு ஏற்கெனவே பல கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. குறை நிரப்புத் திட்டத்தின் கீழ் மேலும் 500 கோடி ரூபாவை இலங்கை அரசு பாதுகாப்பு துறைக்காக ஒதுக்கியுள்ளது. தேசிய பாதுகாப்பு நிதி என்று கூறிக்கொண்டு சிங்கள இனவாதம்

அ. தி. மு. க. பிரதமருக்கு தந்தி

# இனப்படுகொலைகளை தடுக்க நடவடிக்கை எடுக்கவும்

(சென்னை)

இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக நடத்திவரும் தாக்குதல் நடவடிக்கைகள் குறித்து இந்திய மத்திய அரசு தக்க கடும் நடவடிக்கையினை எடுக்கத் தவறியுள்ளதாக அனைத்திந்திய அ. தி. மு. க வும் இந்திய அரசை குற்றம் சாட்டியுள்ளது.

இலங்கை நடவடிக்கைகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பணக்காரர் முதல் பரதேசி வரை பாதுகாப்பு நிதியுதவி

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு நிதிக்கு சிங்களமக்களில் பெரும்பணக்காரர் முதல் பிச்சைக்காரர் வரை பணஉதவி அளித்து வருவதாகக் கொழும்பில் இருந்து வரும்செய்திகள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா அரசு திரட்டும் தேசிய பாதுகாப்பு நிதிக்கு சிங்கள மக்கள் மனமுவந்து தாமாகவே முன்வந்து நிதி அளித்து வருகிறார்கள். இதனால ஸ்ரீலங்கா அரசின் தேசிய பாதுகாப்பு நிதிக்கு பெருமளவில் நிதிசேர்வதாகத் தெரிகின்றது. இந் நிதி முழுமையாக ஸ்ரீலங்காவின் ஆயுதப் படைகளுக்கே செலவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இல. தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு அசட்டை

## இந்திரா காங்கிரஸ் குற்றச்சாட்டு

(சென்னை)

இலங்கைத் தமிழ் மக்கள் பற்றிய விடயத்தில் இந்திய மத்திய அரசு அசட்டையான போக்கையே கையாண்டு வருவதாக இந்திரா காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

முன்னாள் பிரதர் திரு. ராஜீவ் காந்தி தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மேற்படி கட்சியின் ஒன்பது பேர் கொண்ட குழு நேற்று சென்னையில் கூடியது. அப்பொழுதே இந்திய மத்திய அரசுக்கு எதிரான இந்தக் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த மத்தி அரசு தக்க நடவடிக்கை

(4ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா படையில் சேர காத்துக்கிடக்கும் சிங்கள இளைஞர்

(கொழும்பு)

தமிழருக்கெதிரான யுத்தத்தில் ஈடுபடுவதற்காக ஸ்ரீலங்கா இராணுவத்தில் சேருவதற்கு பல ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் காலிமுகத்திடலில் இரவு, பகலாக காத்துக் கிடக்கின்றனர். தினமும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட 18முதல் 25 வயதுக்குட்பட்ட சிங்கள இளைஞர்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தில் சேருவதற்காக அங்கு கூடியுள்ளனர், பெரும்பாலானவர்கள் இரவிலேயே வந்து கடற்கரையில் படுத்திருந்துவிட்டு காலையில் எழுந்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். ஆனால் ஆயிரக் கணக்கானவர்களுக்கு ஒரே நாளில் நேர்முகப் பரீட்சை வைக்க முடியாததினால் பலர் தொடர்ந்து அங்கேயே இரவு பகலாகத் தங்கிவிடுகின்றனர். (ம)

# திருமலையில் தமிழர் வீடுகள் உடைப்பு, தீவைப்பு

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் உள்ள நிலாவெளி, சாம்பல் தீவு, ஆறாம்கட்டை ஆகிய பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரும், சிங்களக்காடையர்களும் சேர்ந்து தமிழ் மக்களின் வீடுகளை உடைத்து பொருட்களை ஏற்றிவருவதாகச்செய்திகள் தெரிவிக்கின்றன கல்வீடுகளில் இருந்து நிலைகள், கதவுகள் உட்பட சகலதும் உடைக்கப்பட்டு லொறிகளில் ஏற்றப்படுவதாகச்செய்திகள் தெரிவிக்கின்றன. ஏனைய வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்படுவதாகவும் செய்திகள் குறிப்பிடுகின்றன.

சிங்களக் காடையர்கள் லொறிகளில்ஸ்ரீலங்காஇராணுவத்தால் கொண்டுவரப்பட்டு இவ் அழிவுவேலைகளில் ஈடுபடுத்தபபட்டுள்ளனர்.

# கடற்படைப் படகு தகர்க்கப்படுகிறது

(புங்குடுதீவு)

கடந்த வாரம் நயினாதீவிற்கு சமீபமாக கடற்பாறையில் சிக்கிய ரோந்துப்படகொன்றை கடற்படையினர் தகர்த்து வருவதாக கூறப்படுகிறது.

இப்படகில்இருந்த பொருட்களை அப்புறப்படுத்தி விட்டு படகை பகுதி பகுதியாக தகர்த்து வருவதாகவும் இதை தகர்ப்பதற்கு பாரிய குண்டுகளை வெடிக்க வைப்பதாகவும் கூறப்படுகிறது. (22)

# பிரேமாவின் தூதரைச் சந்திக்க முன் தமிழர் நிலைபற்றி சிங் ஆலோசனை

(புதுடில்லி)

இலங்கையில் இனப்பிரச்சினை தொடர்பாக சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறறுவரும் யுத்தம் பற்றியும் இதில் இந்திய அரசின் நிலைபற்றியும், இந்தியப் பிரதமர் வி. பி. சிங் தலைமையிலான இந்திய அமைச்சரவை நேற்று விரிவாக ஆராய்ந்தது.

சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் செய்தியை எடுத்துக்கொண்டு அவரின் விஷேச தூதுவராக சிறிலங்கா வெளியுறவுச் செயலாளர் பேர்னட் திலகரத்தினா நேற்று புதுடில்லிக்கு வந்து சேர்ந்தார்.

திலகரத்தினாவை வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ராலும் பிரதமர் வி பி. சிங்கும் இன்று அல்லது நாளை சந்திக்கக்கூடும் இதற்கு முன்னர் இலங்கை நிலைமைபற்றி மந்திரிசபை விரிவாக ஆராய்ந்தது.

தமிழ்நாட்டிலிருந்து கலைஞர் கருணாநிதியும் அகில இந்திய அண்ணா தி மு. கழகமும், இந்திரா காங்கிர

(4ஆம் பக்கம் பார்க்க)

# பம்பலப்பிட்டியில் தமிழ் அகதிகள்

பம்பலப்பிட்டி கதிரேசன் கோயிலில் பல தமிழ் மக்கள் அகதிகளாக உள்ளனர்.

கொழும்பு பம்பலப்பிட்டி கதிரேசன் கோயிலில் 200க்கு மேற்பட்ட தமிழர் யாழ்ப்பாணம் வரமுடியாத நிலையில் அகதிகளாக உள்ளனர். இவர்கள் கையில் பணம் இல்லாததினால் சாப்பாட்டிற்கு வசதியில்லாமல் தவிப்பதைக்காணக்கூடியதாக உள்ளது. (ம)

# யாழ். போதனா ஆஸ்பத்திரியை செஞ்சிலுவைச் சங்கம் ஏற்குமா?

## முத்தரப்பு பேச்சு மூலம் முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா ஆஸ்பத்திரியை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்று நடத்துவது பற்றிய பேச்சு வார்த்தைகளை செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் அரசு - விடுதலைப் புலிகளுடன் நடத்தி வருவதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

சுதந்திரமாகவும் நடுநிலையாகவும் இந்த ஆஸ்பத்திரியை இயங்க வைப்பது பற்றி இரு தரப்பிலிருந்தும் உத்தரவாதம் பெறுவதில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமைப் பிரதிநிதி டாக்டர் கொன்ரெஸ்ரா ஈடுபட்டு வருவதாகத் தெரிகிறது.

கடந்த புதன்கிழமை கொழும்பிலிருந்து திரும்பிய டாக்டர் கொன்ரெஸ்ரா அரசு தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவுச்சங்க ஆணையாளர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சகல பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர்களையும் பொது முகாமையாளர்களையும் நாளை செவ்வாய்க்கிழமை காலை பத்துமணிக்கு நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்திற்கு சமுகமளிக்குமாறு உதவிக்கூட்டுறவு ஆணையாளர் கேட்டுக்கொள்கிறார்.

# சென்.ஜோன் அம்புலன்ஸ் மீதும் விமானக் குண்டு வீச்சு

(கிளிநொச்சி)

விமானக் குண்டு வீச்சினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வதற்காக முரசுமோட்டை வைத்தியசாலைக்குச் சென்ற சென்ஜோன் அம்புலன்ஸ் படையினரை விமானமொன்று துரத்திச் சென்று குண்டு வீசியது.

மேற்படி படையினர் மீது வீசப்பட்ட குண்டு வயல்வெளியில் விழுந்து வெடித்ததனால் திரு. யே. நேசயேசுதாசன் தலைமையில் சென்ற முதலுதவிப் படையினர் உயிர் தப்பினர். (49)

# கரையோர கிராம மக்களுக்கு இன்னமும் நிவாரணம் இல்லை

(யாழ்ப்பாணம்)

குருநகர், பாஷையூர் கரையோரக் கிராமங்களில் பரவலாக நடத்திய விமானத் தாக்குதலினால் வீடுவாசல்களிலிருந்து வெளியேறிய 1538 குடும்பங்களுக்கு பாஷையூர் அர்ச். அந்தோனியார் கோவில் பங்குத்தந்தை அரிசி, குழந்தைகளுக்கான பால்மா, சீனி போன்ற உணவுப் பொருள்களை விநியோகித்துள்ளார்.

அர்ச். அந்தோனியார் பாடசாலை, அரியாலை புனித லூக்ஸ் தேவாலயம், கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம், புனித யோசேப் கல்லூரி, கொழும்புத்துறை புனித றோஸரிமடம் ஆகியவற்றிலும் கிழக்கு அரியாலை எழிலூர் ஆகிய கிராமங்களில் உறவினர், நண்பர்களுடனும் இவ் அதிகள் தங்கி உள்ளனர்

இவர்களில் பலருக்கு அரசினா வழங்கும் உலர் உணவுப் பொருள்கள் இன்னமும் கிடைக்கவில்லையாம். மேற்படி அகதிகள் முகாம்களுக்கு குடிதண்ணீர் விநியோகத்தையும் சுகாதார வசதிகளையும்யாழ். மாநகரசபை உத்தியோகத்தர்கள் நல்ல முறையில் மேற்கொண்டு வருவதாகவும் அகதிகள் தெரிவித்தனர். (7?)

தமிழ்மக்கள் படுகொலைகளைக் கண்டித்து

# ஈரோஸ் பாராளுமன்றத்தை பகிஷ்கரிக்கும்

(கொழும்பு)

ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் ஐந்தாம் திகதியிலிருந்து இலங்கை பாராளுமன்றத் தொடர்களில் கலந்து கொள்ளாது பகிஷ்கரிக்க முடிவுசெய்துள்ளனர்.

தற்பொழுது இலங்கை அர

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவிற்கு மருந்து அனுப்பப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

அலம்பில், தண்ணீரூற்று புதுக்குடியிருப்பு, உடையார் கட்டு ஆகிய பகுதிகளில் செஞ்சிலுவைச்சங்க மருத்துவ சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. போதியளவு மருந்துகள் இங்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகவும் வைத்தியர்களும், தாதிகளும் அப்பகுதியிலுள்ள அகதிகள் முகாம்களுக்கும் சென்றுவைத்திய உதவிகளை வழங்குவார்கள் எனவும் யாழ் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

சில அகதிமுகாம்களில்அதிக எண்ணிக்கையானோர் தங்கி இருப்பதால் தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் அங்கு இருப்பதாகவும், இதனைத் தடுக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர்கூறினார்.

(மு)

## குருநகரில் ஐம்பதிற்கு மேற்பட்ட வீடுகள் சேதம்

(விசேட நிருபர்)

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் அரசபடைகள் யாழ்நகரில் நடத்திய மோசமானதாக்குதலுக்கு குருநகர் பகுதியில் மட்டும் ஐம்பதிற்கும் அதிகமான வீடுகள் சேதம் அடைந்துள்ளன.

குருநகர் முதலாம் குறுக்கு வீதி, ஐஸ்பிளாண்ட் வீதி, மத்திய மேற்கு வீதி ஆகியவற்றில் அமைந்திருந்த வீடுகளே சேதமடைந்தன.

குருநகர் மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து சென்றிருந்ததால் உயிர் இழப்புகள் தவிர்க்கப்பட்டன.

அப்பகுதியில் பத்திற்கும் குறையாத வீடுகள் தரை மட்டமாக காணப்பட்டன. நாற்பதிற்கும் குறையாத வீடுகளில் கூரை ஓடுகள், அஸ்பெஸ்ரஸ்சீற், யன்னல், கதவுகள் சேதமடைந்திருந்தன.

அரச, கூட்டுத்தாபன நிறுவனங்களான ஐஸ் தொழிற்சாலை, சீநோர் வலைத் தொழிற்சாலை என்பனவும் சிறிது சேதத்திற்கு உள்ளாகின.

இத் தாக்குதலால் குருநகர் மக்களுக்குப் பலகோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பிரேமாவின் அச்சம்

(நுவரேலியா)

தற்பொழுது வடக்கு கிழக்கில் ஏற்பட்டுள்ள தீவிரவாத நிலைமைகள் மலையக தோட்டப் பகுதிகளுக்கும் விரிவடையலாம் என்று ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா அச்சம் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் பொருளாதாரத்தை தற்பொழுது தான் கட்டி எழுப்பிவருவதாக கூறிய ஜனாதிபதி மலையக தோட்டப் பகுதிகளிலும் தீவிரவாதம் உருவாகும் பட்சத்தில் கட்டி எழுப்பப்பட்டுவரும் பொருளாதாரம் மேலும் பாதிக்கப்படும் என்று கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## சர்வோதயம் அகதிகளுக்கு உதவி

சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பளை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள அகதி முகாம்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை யாழ் சர்வோதயம் வழங்கவுள்ளது.

அத்தியாவசிய உணவுப் பொருட்களான அரிசி, சீனி, பால்மா, மரக்கறி போன்ற பொருட்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## திருட்டு அதிகரிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. சாவகச்சேரி நீதிமன்றம் முன்பாக உள்ள புத்தகக்கடை ஒன்றிலும், கயிற்றுக்கடை ஒன்றிலும் நேற்று முன்தினமிரவு திருடப்பட்டுள்ளது.

சாவதானமாகக் கடையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருட்டுக் கோஷ்டியினர் அங்கிருந்த பணத்தை திருடியதுடன் கடையில்இருந்த சோடாவையும் உடைத்து குடித்து பீடியும் புகைத்து சென்றுள்ள தடையங்கள் காணப்பட்டுள்ளன.

இரண்டு கடைகளில் சுமார் மூவாயிரம் ரூபா வரையில் திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (35)

## கடற்படைதாக்கி ஒருவர் காயம்

(வல்வெட்டித்துறை)

சென்றசனிகாலை5.30 மணி

# இராணுவ கெடுபிடிகளின் மத்தியில்

# யாழ். வந்த பயணியின் அனுபவம்

**கொழும்பிலிருந்து தரைமார்க்கமாக அண்மையில் யாழ்ப்பாணம் வந்தடைந்த ஒரு பயணியின் பயண அனுபவம்.**

பிரபல புகைப்பட நிறுவனம் ஒன்றின் உரிமையாளரான இப்பயணி, கடந்த பன்னிரெண்டாம் திகதி இரவு தபால் புகையிரதத்தில் தமது பயணத்தை தொடங்கி அனுராதபுரம் வரைக்கும் புகையிரதத்தில் வந்து சேர்ந்தார் தொடர்ந்தும் மதவாச்சி வரையும் புகையிரதத்திலேயே வந்த பயணிகள் வவுனியா செல்லமுடியாது என புகையிரத அதிகாரிகள் அறிவித்ததையிட்டு மீண்டும் கொழும்புக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானார். கொழும்பு திரும்பிய இவர் வாடகை விடுதி ஒன்றில் ஓர் அறையில் தங்கியிருந்தார்.

**பொலிஸ் கெடுபிடி**

அன்று இரவு பன்னிரெண்டு மணியளவில் திடீரென அவரது அறைக்கதவு தட்டப்பட்டது.படுக்கையிலிருந்துஎழுந்து கதவைத் திறந்த போது பொலிஸ் அதிகாரி ஒருவர் வாசலில் நின்றார். உள்ளே நுழைந்த அவ்வதிகாரி இவரை துருவித்துருவிப் பல கேள்விகளைக் கேட்டார். தொடர்ந்து அடையாள அட்டை உட்பட, எதையும் விட்டு வைக்காது உடைமைகளைச் சோதனையிட்டார். இறுதியாக கழிப்பிட அறையையும் சோதனை இட்ட பின்பு ஓரளவு மனத்திருப்தியுடன் வெளியேறியதாக அவர் கூறினார்.

**நீண்ட பயணம்**

அடுத்த நாளிலிருந்து மூன்று நாட்களாக தொடர்ந்து தினமும் கொழும்பிலிருந்து மதவாச்சி வரைக்கும் வந்து சென்றதாகவும் அவர் கூறினார்.

ஒருசில நாட்களின்பின் பம்பலப்பிட்டி கதிரேசன் ஆலயத்திலிருந்து சில பயணிகளை ஏற்றி கொண்டு பேருந்து யாழ்ப்பாணம் செல்வதாக அறிந்து, அங்கு சென்று தமது பெயரையும் பதிவு செய்து பயணத்திற்கு ஆயத்த மானதாகவும் தம்முடன் சரியாக

**சிறுடையில் காடையர்**

சிறிது தூரம் சென்றதும் இராணுவ உடை தரித்த சிங்களக் காடையர் எம்மை வழிமறித்ததுடன் பஸ்ஸிலிருந்து இறங்கும்படி பணித்து நாங்கள் உறங்கிக் கொண்டிருக்கும்போது துப்பாக்கி பிடியினாலும் கல், குண்டாந்தடி சைக்கிள் செயின் முதலியவற்றால் ஒவ்வொருவரும் கோரமான முறையில் தாக்கப்பட்டோம்இதனால்பலரது தலைகளில் காயம் ஏற்பட்டு இரத்தம் ஓடியது உடல் முழு

**காடையர் அட்டகாசம்**

மதவாச்சியில் காடையர்களால் வழிமறிக்கப்பட்ட நாம் தாக்கப்பட்டோம். கெட்ட வார்த்தைகளால் தூற்றப்பட்டோம்.

மரணபயமடைந்த நாம் காடையர்களின் தாக்குதலுக்கு உட்படுவதை தவிர்ப்பதற்காக திரும்பவும் அனுராதபுரம் சென்று அங்குள்ள விவேகானந்தா கல்லூரிக்குச் சென்று தங்குவதாக தீர்மானித்தோம். அவ்வேளை 1977 ஆம் ஆண்டு இவ் அனுராதபுரத்தில் நடந்த அநியாயங்களை தாம் நினைவு கூரவும் தவறவில்லை என்றும் அவர் கூறத்தவறவில்லை.

காடையரின் அட்டகாசத்தால் மிகுந்த பயத்தின் மத்தியில் அன்றைய இராப்பொழுதை விவேகானந்தா கல்லூரியிலேயே கழித்த நாம் விடிந்ததும் மிக விரைவில் பயணத்தை ஆரம்பித்து விடுவது என்று தீர்மானித்திருந்த பொழுதிலும் சாரதிகளின் திட்டமிட்ட நொண்டிச்சாட்டுகளால் காலை பத்தரை மணிக்கே அனுராதபுரத்தை விட்டு நகர முடிந்தது.

அனுராதபுரத்திலிருந்து மதவாச்சியை அடைந்து அங்குள்ள இராணுவ முகாமை நெருக்கினோம். பஸ் நிற்பாட்டப்பட்டது. பொலிஸ் அதிகாரி ஒருவர்எம்மைசோதனை செய்து மேலும் பயணத்தை தொடருவதற்கு அனுமதி பெற்றோம்.

கொள்ள வேண்டிய நிலைக்கு உள்ளானோம். அந்த இராணுவ முகாமில் நாம் வழிமறிக்கப்பட்டு இதற்குமேல் வவுனியா வரைக்குமேபயணிகள் செல்லலாம். வவுனியாவுக்கு அப்பால் செல்வோர் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் எனஇராணுவத்தினர் கூறினர். இருந்தாலும் சில தந்திர புத்தியுடைய பயணிகள் வவுனியாவுக்கு சென்று விட்டால் அது எமது நாட்டின் எல்லை நகரம் ஆகவே நாம் அங்கு சென்றால் எம்மை எவரும்எதுவும்செய்துவிட முடியாது என்று எண்ணியதால் நூறு பேர் மட்டும் மனத்துணிவுடன் பஸ்களில் ஏறிக்கொண்டோம் என்றார்.

**லோகன்**

ஏனையோர் திரும்பவும் கொழும்பு செல்ல தீர்மானித்தனர் நூறு பேருடனும் தொடர்ந்து பஸ் பயணமானது. எம்மைப் பொறுப்பாக எடுதது சென்ற இராணுவத்தினர். அடுத்த இராணுவ முகாமில் ஒப்படைப்பதுதான் எமது கடமை என கூறிய போது நாம் எமது வாழ்க்கையில் நம்பிக்கை அற்ற நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

**பெண்கள், குழந்தைகள் அழுகை**

இராணுவத்தினர் கூறியது போல் அடுத்த இராணுவ முகாமும் வந்தது. முகாம் வாசலில் எம்மை ஏறத்தாழ ஐம்பதுக்குமேற்பட்டகாடையர்களும் வெறியர்களும் வரவேற்ற பொழுது பெண்கள் குழந்தைகள் எல்லோரும் தலையில் கைவைத்து அழ ஆரம்பித்துவிட்டனர். ஆண்கள் பலர் தமது தெய்வங்களை வேண்டினர். பல முஸ்லிம் மக்களும் தற்போது எம்முடனிருந்தனர். இவர்கள் புத்தளத்திலிருந்து வந்து எம்முடன் (அனுராதபுரத்தில்) இணைந்து பயணம் செய்வர்கள் ஏற்கனவே இராணுவம் காடையர்களிடம் ஏராளம் உடைமைகளை பறிகொடுத்தவர்கள் ஆண்டவனை உரக்க அழைத்தனர்.

எமது நல்ல காலம் எம்மை எதிர்கொண்டு அழைத்தஇராணுவ அதிகாரி சற்று படித்தவராகவும் சிறிது மனிதத்தன்மை உடையவராக இருந்ததால் நாம் தொடர்ந்து வவுனியா நகரம் வரை அந்த இராணுவ அதிகாரியின் வாகனத்தின் பின்னால் சென்றோம்.

**வவுனியாவில் நாம்**


வவுனியாவில் நாம் கண்ட காட்சி எமது மனத்தை உலுக்கியது. வவுனியா நகரம் புகை மண்டலமாக காட்சி அளித்தது. வெறிச்சோடி இருந்தது. எங்கும் சிங்கள சிப்பாய்களின் அனர்த்தமே காணப்பட்டது.

ஸ்ரீலங்காவிமானப்படையின் குண்டுவீச்சால் ஏராளம் கடைகளும் கட்டிடங்களும் உடைந்து நொருங்கி போயிருந்தன. இந்த காட்சிகளை நாம் வவுனியா எரிபொருள் நிலையத்தின் முன் நின்று கண்டோம். அப்போது வவுனியா அரச அதிபர் எம்மிடம் வந்து உணவு உண்டு செல்லுமாறு கேட்டுக் கொண்ட போதிலும் நாம் விரைவாக வீடு செல்ல வேண்டி இருப்பதால் உடன் விடைபெற்றுக் கொண்டோம்.

நாம் தொடர்ந்து பயணத்தைக் கால் நடையாகவே செய்ய வேண்டியதாயிற்று. ஏனெனில் நகரின் சில பகுதிகளுக்கு அப்பால் இராணுவத்தின் வலு மிகக் குறைவாக இருந்ததால் அவர்கள்எம்முடன்வரவே பயப்பட்டனர். இதுவரை அடக்கமாக இருந்த நாமே தமிழ்ப் பகுதிக்கு வந்ததும் புலியாக மாறிவிடு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. பழனிவேல்சாமி உதயராஜா**

**இன்பருட்டி கிராமமுன்னேற்றச் சங்கத் தலைவர்**

| ஆண்டவன் படைப்பு | அரக்கன் அழிப்பு |
| --- | --- |
| 5 - 4 - 64 | 13 - 7 - 89 |

அன்புச் செல்வம் உதயராஜா!
நாளொரு மேனியாக ஆண்டும் ஒன்றாச்சு
ஆண்டொன்றாயினும் அழுத கண்ணீர் மாறவில்லை
ஒளிவிளக்காய் காட்சி தந்த உன்னை காற்றாக வந்த
காலன் வழி மறித்தான்
மலர் போன்ற உன்முகத்தை உன் மகளே தேடுகிறாள்
உன் மகள் அப்பாவென்றால் என் மனம் தாங்குமோ
எம் செல்வ மகனே ராஜன்
எம் இதயத்தில் உன்நினைவுகள் ஆலயமாக்கப்பட்டு
உன் ஆத்மா சாந்தி அடைய நித்தம் விளக்கேற்றி
இறைவனை வேண்டுகிறோம்.

உன் பிரிவால் துயருறும்,

பழனிவேல்சாமி குடும்பத்தினரும் மற்றும்
மனைவி, மகள் உதயாவும்,
உற்றார் உறவினர்களும்.

(B/1211)

பாதிக்கப்படும் என்று கூறிய தாகவும் தெரிவிக்கப்பட்டது.

## சர்வோதயம் அகதிகளுக்கு உதவி

சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பளை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள அகதி முகாம்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை யாழ் சர்வோதயம் வழங்கவுள்ளது.

அத்தியாவசிய உணவுப் பொருட்களான அரிசி, சீனி, பால்மா, மரக்கறி போன்ற பொருட்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது இதற்குத்தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வதில் சர்வோதய யாழ் கிளையினர் செயற்பட்டு வருகின்றனர். (ம)

## அலுவலக இடம்மாற்றம்

யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளர் அபிவிருத்தி, எண்பார்வை ஆகிய அலுவலகங்கள் நல்லூர் பல.நோ.கூ. சங்க தலைமை அலுவலகத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது. இவ் அலுவலகத்தைச் சேர்ந்த வெளிக்கள உத்தியோகத்தர்களும், அலுவலக உத்தியோகத்தர்களும் கடமைக்குச் சமுகமளிக்கும்படி கூட்டுறவு உதவி ஆணையாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

## உமாகாந்துக்கு இறுதி அஞ்சலி

பலாலியில் ஸ்ரீலங்கா இராணுவத்துடனான நேரடிமோதலில் களப்பலியான வீரவேங்கை உமாகாந்தின் பூதவுடல் நேற்றையமுன்தினம் சாவகச்சேரி சந்தை மைதானத்தில் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

சாவகச்சேரிசோகமயமாகக் காட்சியளித்தது. கறுப்புக் கொடிகளும் தோரணங்களும் வீதிகளில் கட்டப்பட்டிருந்தன மாணவர்களும் பொதுமக்களும் பெருந்திரளாகக் கலந்து கொண்டு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

பின் கண்ணாடிப்பிட்டி பொதுமயானத்திற்கு பூதவுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. இறுதி ஊர்வலத்தில் பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர். சாவகச்சேரி விடுதலைப் புலிகள் முக்கியஸ்தர்களான தினேஷ், பாப்பா, கோபால் ஆகியோரும், மகளிர்முன்னணியினரும் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். பாண்ட் வாத்தியக் கோஷ்டி சோக கீதம் மீட்டியது. (மு)

கடை ஒன்றிலும் நேற்று முன் தினமிரவு திருடப்பட்டுள்ளது.

சாவதானமாகக் கடையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருட்டுக் கோஷ்டியினர் அங்கிருந்த பணத்தை திருடியதுடன் கடையில்இருந்த சோடாவையும் உடைத்து குடித்து பீடியும் புகைத்து சென்றுள்ள தடையங்கள் காணப்பட்டுள்ளன.

இரண்டு கடைகளில் சுமார் மூவாயிரம் ரூபா வரையில் திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (35)

## கடற்படைதாக்கி ஒருவர் காயம்

(வல்வெட்டித்துறை)

சென்றசனிகாலை5.30 மணியளவில் வடக்கு கடற்பிரதேசத்தில் ரோந்து செய்துவரும் கடற்படையினர் பருத்தித்துறை முனைப்பகுதியில் கரையில் நின்ற மீன்பிடிப் படகுகள் மீது தாக்குதல் நடாத்திச் சேதப்படுத்தினர். அப்போது வீதியில் சென்றுகொண்டிருந்தபருத்தித்துறைவாசியான பற்றிக் பர்ணாண்டோ ஜோசப் றெயினோல்ட் (வயது 27) என்பவர் கடும்தாக்குதலுக்குள்ளான நிலையில் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (68)

## பிரான்சிய கலாசாரப் பிரிவும் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் முதலாம்குறுக்குத்தெருவில் அமைந்துள்ள பிரான்சிய கலாசாரப் பகுதியின் யாழ் கிளை அலுவலகம் கடந்த வெள்ளி பிற்பகல் 3 மணியளவில் ஸ்ரீலங்கா விமானப் படையின் குண்டுவீச்சு விமானங்களின்குண்டுவீச்சுக்கு இலக்காகி முற்றாகச் சேதமடைந்தது.

1976 இல் அமைக்கப்பட்ட இந்தக் கிளை அலுவலகம் சமீபத்திய அனர்த்தங்களின் போது ஏலவே நான்கு முறைகள் ஷெல் தாக்குதல்களினாலும், குண்டுவீச்சினாலும் சிறிதளவான சேதத்திற்குள்ளானது குறிப்பிடத்தக்கது.

## வல்வைக் கரையில் கடற்படைக் கப்பல்

(வல்வெட்டித்துறை)

வல்வைக்கடலில் பெரிய கடற்படைக் கப்பல் தரித்து நிற்பதுடன் நான்கு சிறிய கப்பல்களும் ரோந்து புரிகின்றன.

மேற்படி பாரிய கடற்படைக் கப்பலுடன் அடிக்கடி ஹெலிக்கொப்டர் நெருங்கிச் சென்று தொடர்பு கொள்கின்றன. இச் செயல்களும் பாரிய கப்பலின் தரிப்பாலும் மக்கள் பெரும்அச்சமடைகின்றார்கள். (68)

**கொழும்பிலிருந்து தரைமார்க்கமாக அண்மையில் யாழ்ப்பாணம் வந்தடைந்த ஒரு பயணியின் பயண அனுபவம்.**

அடுத்த நாளிலிருந்து மூன்று நாட்களாக தொடர்ந்து தினமும் கொழும்பிலிருந்து மதவாச்சி வரைக்கும் வந்து சென்றதாகவும் அவர் கூறினார்.

ஒருசில நாட்களின்பின் பம்பலப்பிட்டி கதிரேசன் ஆலயத்திலிருந்து சில பயணிகளை ஏற்றி கொண்டு பேருந்து யாழ்ப்பாணம் செல்வதாக அறிந்து, அங்கு சென்று தமது பெயரையும் பதிவு செய்து பயணத்திற்கு ஆயத்த மானதாகவும் தம்முடன் சரியாக இருநூற்றுத் தொண்ணூறு பயணிகள் இருபத்தி ஏழாம் திகதி காலை ஒன்பது மணியளவில் கதிரேசன் கோவிலிருந்தும் பயணம் ஆரம்பித்ததாகவும் இதில் ஆண்கள் பெண்கள், குழந்தைகள் உட்பட பலர் இருந்தனர். அனுராதபுரம் வரைக்கும் பேருந்துப் பயணம் மிகவும் சுமுகமாக இருந்ததாக அவர் தெரிவித்தார்.

மாலை நான்கு முப்பது மணியளவில் அனுராதபுரத்தை அடைந்த இப்பயணிகள் வாகனம் சில சாக்குப் போக்குகள் சொல்லி, திட்டமிட்டு நேரத்தைக் கடத்துவதற்காக எஞ்சின்கள் பழுது பார்க்கப்பட வேண்டும், காற்று அடிக்க வேண்டும் என்று கூறி அனுராதபுரம் டிப்போவிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. பின்பு ஒருவாறு பயணம் தொடரப்பட்டு இரவு ஏழரை மணியளவில் மதவாச்சியை அடைந்தோம் என்றார் அவர்.

**சீருடையில் காடையர்**

சிறிது தூரம் சென்றதும் இராணுவ உடை தரித்த சிங்களக் காடையர் எம்மை வழிமறித்ததுடன் பஸ்ஸிலிருந்து இறங்கும்படி பணித்து நாங்கள் உறங்கிக் கொண்டிருக்கும்போது துப்பாக்கி பிடியினாலும் கல், குண்டாந்தடி சைக்கிள் செயின் முதலியவற்றால் ஒவ்வொருவரும் கோரமான முறையில் தாக்கப்பட்டோம்இதனால்பலரது தலைகளில் காயம் ஏற்பட்டு இரத்தம் ஓடியது உடல் முழுவதும் உட்காயங்களுக்குட்பட்டோம். இளம் பெண்களை கெட்டவார்த்தைகளால் தூற்றினர் இதில் சிங்கள மொழி தெரிந்தசிலர்மிகுந்தவேதனை அடைந்ததாகவும் மொழி தெரியாதோர் இந்த வார்த்தைகள் அர்த்தம் புரியாததால் அவற்றிலிருந்து தப்பிக் கொண்டதாகவும் அவர் கூறினார்.

சிறிது நேரத்தில் அனைவரும் மீண்டும் பஸ்களில் ஏற உத்தரவிடப்பட்டது.

**சோதனை மேல் சோதனை**

தொடர்ந்து பஸ் பயணம் செய்யவும் அனுமதிக்கப்பட்டதால் அதிலிருந்து நாம் ஒருவாறு பிழைத்தோம். இருந்தாலும் இன்னும் எத்தனை சோதனைகள் எம்மை எதிர்கொள்ள உள்ளதோ என்ற ஏக்கமும் எம்மை வாட்டியது திடீரென எம்மை இன்னோர் இராணுவமுகாம்எதிர்கொண்டதால் நாம் எதிர்பாராத வகையில் மீண்டும் கிலி

ஐம்பதுக்குப்மேற்பட்டகாடையர்களும் வெறியர்களும் வரவேற்ற பொழுது பெண்கள் குழந்தைகள் எல்லோரும் தலையில் கைவைத்து அழ ஆரம்பித்துவிட்டனர். ஆண்கள் பலர் தமது தெய்வங்களை வேண்டினர். பல முஸ்லிம் மக்களும் தற்போது எம்முடனிருந்தனர். இவர்கள் புத்தளத்திலிருந்து வந்து எம்முடன் (அனுராதபுரத்தில்) இணைந்து பயணம் செய்வர்கள் ஏற்கனவே இராணுவம் காடையர்களிடம் ஏராளம் உடைமைகளை பறிகொடுத்தவர்கள் ஆண்டவனை உரக்க அழைத்தனர்.

எமது நல்ல காலம் எம்மை

ஆண்டவன் படைப்பு 5 - 4 - 64 | அரக்கன் அழிப்பு 13 - 7 - 89

அன்புச் செல்வம் உதயராஜா!
நாளொரு மேனியாக ஆண்டும் ஒன்றாச்சு
ஆண்டொன்றாயினும் அழுத கண்ணீர் மாறவில்லை
ஒளிவிளக்காய் காட்சி தந்த உன்னை காற்றாக வந்த
காலன் வழி மறித்தான்?
மலர் போன்ற உன்முகத்தை உன் மகளே தேடுகிறாள்
உன் மகள் அப்பாவென்றால் என் மனம் தாங்குமோ
எம் செல்வ மகனே ராஜன்
எம் இதயத்தில் உன்நினைவுகள் ஆலயமாக்கப்பட்டு
உன் ஆத்மா சாந்தி அடைய நித்தம் விளக்கேற்றி
இறைவனை வேண்டுகிறோம்.

உன் பிரிவால் துயருறும்,

பழனிவேல்சாமி குடும்பத்தினரும் மற்றும்
மனைவி, மகள் உதயாவும்,
உற்றார் உறவினர்களும்.

(B/1211)


வெளிநாடுகளிலும், கொழும்பிலும் உள்ள உங்கள் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும்

அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக கடிதங்கள், புத்தகங்கள், பார்சல்கள், தஸ்தாவேஜுக்கள்


ஆகியவற்றை அனுப்ப உடன் தொடர்பு கொள்ளுங்கள்

DHL WORLDWIDE EXPRESS

D. H. L. International Ltd;

C/o. Cosmos Marketing Services
331, Kasthuryar Road, Jaffna.

(B 965)


தரமிக்க உருக்கிலான தளபாடங்களுக்கு
நாட வேண்டிய ஸ்தாபனம்

“ஜனார்த்தனஸ்” இணுவில்

தரமான உறுதிமிக்க நீடிய பாவனைக்குகந்த உருக்கினாலான
அலுமாரிகள், மேசைகள், கதிரைகள், தட்டச்சு மேசைகள்

மற்றும்

காரியாலய வீட்டுத் தளபாடங்கள் அத்தனையும்
அதி நவீன டிசைன்களில் என்றும் பெற்றுக் கொள்ள
தாமதமின்றி நாடுங்கள்.

ஜனார்த்தனஸ் இன்டஸ்ரீஸ்
காங்கேசன்துறை வீதி,
இணுவில்.

### சிந்தனைக்கு

பாதுகாப்புடனும், சுதந்திரத்துடனும் கூடிய தனிமனிதனின் நல்வாழ்வே அரசியல் முயற்சி அனைத்திற்கும் குறிக்கோள்.

- தாக் ஹோமர் ஷோல்ட்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 02-07-90

தொலைபேசி

ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208

த. பெ. எண் 05

# சும்மா கிடைக்குமா சுதந்திரம்?

''சுதந்திரம் என்பது ஒரு நாட்டு மக்களுக்கு வானத்திலிருந்து தானே விழுந்துவிடாது. மக்கள் தங்களைச் சுதந்திரத்துக்கு ஏற்றவர்களாக்கிக் கொள்ள வேண்டும். சுதந்திரம் ஒரு பேரின்பம். பாடுபட்டு அதைப் பெற்றால்தான் இன்பத்தை நுகரலாம்.''

டில்லி அரசாங்க செயலகத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் வாசகம் இது.

''சுதந்திரம் நமது பிறப்புரிமை'' என்று முழக்கம் செய்தவர் லோகமான்ய பாலகங்காதர திலகர்.

நீண்டகாலப் போராட்டம் நடத்தி பெரும் தியாகங்கள் செய்து இந்தியா சுதந்திரம் பெற்றது,

இந்தியாவின் சுதந்திரப் போராட்டமே இலங்கை போராட்டம் எதுவுமின்றிச் சுதந்திரம் பெற முடிந்தது.

சிங்களத் தலைவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை நம்பி அன்றைய தமிழ்த் தலைவர்கள் வழங்கிய ஒத்துழைப்புத்தான் இலங்கைக்கு சுதந்திரம் ''சும்மா'' கிடைப்பதற்குக் காரணமாக இருந்தது.

இலங்கைக்குக் கிடைத்த சுதந்திரம் சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே கிடைத்த சுதந்திரமாக சிங்கள பௌத்த பேரினவாதிகள் கருதினார்கள். இன்றும் அதே கருத்தையே கொண்டிருக்கிறார்கள்.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த காலத்திலிருந்து தமிழ்த் தலைவர்கள் காலத்துக்குக்காலம் பேச்சுவார்த்தை என்றும் ''உடன்படிக்கை'' என்றும் ''ஒப்பந்தங்கள்'' என்றும் ஏமாற்றப்பட்டே வந்திருக்கிறார்கள்.

சுதந்திரம் பெற்ற ஓராண்டுக்குள் 1949 ஆம் ஆண்டு மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளரின் குடியுரிமை பறிக்கப்பட்டது.

1950 ஆம் ஆண்டிலிருந்து திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மண் பறிக்கப்பட்டது; இன்றும் தொடர்ந்து பறிக்கப்பட்டு வருகிறது.

1956 ஆம் ஆண்டில் தமிழ் மக்களின் உரிமை பறிக்கப்பட்டது. தொடர்ந்து தமிழ் மக்கள் கொழும்பிலும் இங்கினியாகல அம்பாறையிலும் தாக்கப்பட்டார்கள்.

1958 ஆம் ஆண்டில் தூண்டிவிடப்பட்ட இனக்கலவரம் 1983 ஆம்ஆண்டு வரை காலத்துக்குக்காலம் ஏற்படுத்தப்பட்டு தமிழ் மக்களின் உயிரும் உடைமைகளும் சூறையாடுவது வழக்கமான நடைமுறையாக்கப்பட்டது.

சிங்கள பௌத்த பேரினவாதிகளின் பிரதிநிதியாக இன்று ஆட்சிபீடத்திலிருக்கும் பிரேமதாசா அரசு தமிழ் மக்களுக்கு எதிராகப் போர் தொடுத்திருக்கிறது.

இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் போர் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவும் அவரது சகாவான பாதுகாப்பு

# பிரேமதாசாவின் பேரினவாதம்

பிரேமதாசா ஒரு தேசியத் தலைவன் அல்ல. அவர் சிங்கள பௌத்த பேரின வாதத்தின் தலைவன்.

நிறுவனமயப்பட்ட சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு அவர் இன்று தலைமைதாங்குகிறார்.

இப்பேரின வாதத்திற்கு இதுவரை தலைமைதாங்கிய டி. எஸ். சேனாயக்கா, எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, டட்லி சேனநாயக்கா, ஸ்ரீமா பண்டாரநாயக்கா, சேர். ஜோன் கொத்தலாவலை, ஜே. ஆர். ஜெயவர்த்தனா போன்ற தலைவர்களைப் போல பிரேமதாசாவும் பேரினவாதத் தலைவனே.

எனவே பிரேமதாசாவிடமிருந்து அன்பு, அஹிம்சை, அமைதி, சமாதானம் என்பவற்றை ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது.

அவ்வாறாயின் விடுதலைப் புலிகளும் பிரேமதாசா அரசாங்கத்திற்கும் இடையில் எவ்வாறு பேச்சுவார்த்தை நிகழ முடிந்தது என்ற கேள்வி எழலாம்.

பிரேமதாசா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஒரு பொது நோக்கம் இருந்தது. பத்மநாபா, வரதராஜப்பெருமாள் தலைமையிலான ஈ. பி. ஆர். எல். எவ் போன்ற கும்பல்கள் சகிதம் இந்திய இராணுவம் எம் மண்ணில் அட்டூழியங்களைச் செய்து வந்த சூழலில் விடுதலைப் புலிகளுக்கும், பிரேமதாசா அரசாங்கத்திற்கும் இடையில் இந்திய இராணுவம் சம்பந்தமாக ஒரு பரஸ்பர பொது நோக்கம் ஏற்பட்டது.

எனவே பிரேமதாசா தமிழ் பேசும் மக்கள் மீது அக்கறையுள்ளவர் என்ற அடிப்படையிலோ, அல்லது தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளக் கூடிய மனப்பக்குவமும் வல்லமையும் உள்ளவர் என்ற அடிப்படையிலோ அப் பேச்சுவார்த்தைகள் நிகழவில்லை. யாரை யார் முந்துவது என்ற உள்நோக்கங்களின் அடிப்படையில் இப் பேச்சு வார்த்தைகள் நிகழ்ந்துள்ளனவே தவிர பிரேமாவை தமிழ்பேசும் மக்களின் இரட்சகர்கள் என்ற நோக்கு நிலையிலல்ல.

இரத்தம் தோய்ந்த தன் கொடுங்கரங்களை மஞ்சற்காவி வஸ்திரத்தாற் போர்த்து மூடிக்கொண்டு அட்டசீலத்தின் காவலனாய், சமாதான புருஷனாய் பிரேமதாசா காட்சியளிக்கிறார்.

புத்தபிரான் மஞ்சற்காவி அங்கிக்குப்புனித மூட்டினார். அரச வஸ்திரத்தை களைந்து மஞ்சற்காவி வஸ்திரம் அணிந்தார். புத்தபிரான் ஒரு புனிதர், புரட்சியாளன் அவர் சாதிப்பாகுபாட்டிற்கு எதிராக புரட்சிக்குரல் எழுப்பியவர். சமூகத்திற்கு திருத்தங்களைச் செய்வதற்காக அஹிம்சா முறையிற் போராடியவர். அந்தப் புனிதரால் மகிமையூட்டப்பட்ட அந்த மஞ்சற்காவி வஸ்திரம் இன்று பிரேமதாசா தலைமையிலான பேரினவாதிகளால் இரத்தக்கறைகளை மூடி மறைக்கப் பயன்படுத்தப்படுகிறது

பிரேமதாசா எந்தளவிற்கு சிங்களபௌத்த பேரினவாதத்திற்குத் தலைமை தாங்குகிறார் என்பதை நாம் சற்று ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும். மறுமலர்ச்சி. தேசியவாதம் என்றதன் பேரில் 1950களின் மத்தியில் சிங்கள பௌத்த பேரின வாதம் எழுச்சி பெற்றது. டாக்டர் மலலசேகரா, மெத்தானந்தா போன்றோர் கலாசார ரீதியில் பேரினவாதத்திற்குத் தலைமை தாங்கினர். இவர்கள் போன்றவர்களுடனும், புத்திரக்கித்ததேரோ போன்ற முன்னாள் அரசியற் பிக்குக்களுடனும் கூட்டுச் சேர்ந்து எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு அரசியரீதியிற் தலைமை தாங்கினார். இக்கால கட்டத்தில் 1955 ஆம் ஆண்டு பௌத்த விசாரணைக்குழு தனது அறிக்கையைத் தயாரித்தது. பௌத்த சாசனத்திற்கு என ஓர் அமைச்சரை உருவாக்க வேண்டுமென அவ்வறிக்கை அரசைக் கேட்டுக்கொண்டது.

தனிச்சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்தவரும், முனைப்புப்பெற்ற சிங்கள பௌத்த பேரினவாதத்திற்குத் தலைமை தாங்கியவருமான பண்டாரநாயக்கா கூட பௌத்த சாசனத்திற்கென ஓர் அமைச்சரை உருவாக்கவில்லை. அதன் பின்பு வந்த மற்றைய பேரினவாதத் தலைவர்கள் கூட அப்படி ஓர் அமைச்சை உருவாக்கவில்லை. ஆனால் 1988 ஆம் ஆண்டு தேர்தலில் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரேமதாசாதான் இப்படி பௌத்த சாசனத்திற்கென ஒரு தனி அமைச்சை உருவாக்கி அதற்கான அமைச்சராகவும் தானே இருந்து வருகிறார். ஏனைய சிங்கள பௌத்த இனவாதத் தலைவர்களைவிட பிரேமா மேலும் ஒரு படி பேரினவாதத்தில் முன்னேறிவிட்டார் என்பதை இது காட்டுகிறதல்லவா?

ஏறக்குறைய 35 ஆண்டுகளாக நிறைவேற்றப்படாதிருந்த பௌத்த விசாரணைக் குழுவின் வேண்டுகோளை இன்று பிரேமதாசாதான் நிறைவேற்றியுள்ளார்.

நாட்டின் மொத்த வாக்காளர்களில் 27 4 வீதம் வாக்குகளை மட்டுமே பெற்று பிரேமா ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். ஆதலினால் அடிப்படையில் இவர் ஒரு பலமற்ற ஜனாதிபதியே. மேலும் சிங்கள கொய்கம சாதியைச் சேர்ந்த உயர்குழாத்தவர்களே ஆட்சி அதிகாரத்திற்கு வருவது வழக்கம். பிரேமா கொய்கம சாதியையோ அன்றி உயர் குழாத்தையோ சேராதவர். அந்த வகையிலும் இவர் பலமற்ற பின்னணியைக் கொண்டவர். உயர்குழாத்தைச் சேராத இவர் ஜனரஞ்சக அரசியல் மூலம் தன்னைப் பலப்படுத்த முனைகிறார். இந்த வகையில் இனவாதமும், பௌத்த வாதமும் அவரது ஜனரஞ்சக அரசியலுக்கு அணி சேர்க்கக்கூடிய அம்சங்களாகும். எனவே ஏனைய பேரினவாதத் தலைவர்களையும் விட இவர் அதிகம் பேரினவாதத்திற்குள் தஞ்சமடைய வேண்டியவராக உள்ளார். இவரை ஜனாதிபதி மாளிகையிற் காணும் நேரத்தைவிட பௌத்த வைபவங்களிற் காணக்கூடிய நேரம் அதிகமாகும்.

இன்னுமோர் அம்சமும் இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும். ஜே. ஆரின் ஆட்சிக்காலத்தில்தான் அதிகம் பேர் இராணுவத்திற் சேர்க்கப்பட்டனர். அதாவது அவர் பதவி ஏற்றபோது இருந்த இராணுவத்தின் தொகையைவிட பதவி விலகிய போது இருந்த இராணுவத்தின் தொகை ஆறு மடங்கு பெரியதாகும். ஆகலினால் இலங்கை இராணுவம் பெருமளவுக்கு ஜே. ஆர். மீது விசுவாசமுள்ள இராணுவமாகும். ஸ்ரீமாவுக்கும் பிரேமாவுக்கும் இடையிலான முரண்பாட்டை விட பிரேமாவுக்கும் ஜே. ஆருக்கும் இடையிலான முரண்பாடு உண்மையிற் பெரியதாகும். எனவே நெருக்கடி நிறைந்த கட்டங்களில் இராணுவம் தனது ஆட்சியைக் கவிழ்த்துவிடும் என்ற அச்சம் பிரேமாவிடம் உண்டு. ஆதலினால் தனக்குப் பெரும் மக்களாதரவு உண்டு என்ற பலத்தை இராணுவத்திற்கு காட்டவேண்டிய தேவை ஒருபுறமும், அதேவேளை இராணுவத்தினரை தாசாபண்ணுவதற்காக அவர்களுக்கு விட்டுக் கொடுப்புக்களைச் செய்ய வேண்டிய தேவை மறுபுறமும் இவருக்கு உண்டு. இதிலுள்ள இரண்டு அம்சங்களும் ஒரு முடிவையே கொண்டுவரும்.

அதாவது இராணுவத்தினர்க்கு தனது மக்கள்பலத்தை பிரேமா காட்டவேண்டும் என்றால் பேரினவாதத்தைப் பேசியேமக்களாதரவைப்பெற வேண்டும். அதேவேளை இராணுவமும் பேரினவாதத்தின் ஆயுதம் தாங்கிய ஒரு நிறுவனமே. ஆதலினால் இராணுவத்தின் குணாம்சத்தில் பேரினவாதம் முனைப்புப் பெற்றிருக்கும் எனவே இராணுவத்தினரைத் திருப்திப்படுத்த வேண்டுமென்றால் அதன் பேரினவாதத்திற்கு விட்டுக் கொடுக்கவேண்டும். ஆதலினால் தனது ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கான பிரேமாவின் இருவழிகளும் இறுதியில் ஒரு முடிவாகிய பேரினவாதத்தில் உச்சம் கொள்கின்றது.

தமிழ்பேசும் மக்களை ஒடுக்க இராணுவத்தை கட்டி வளர்த்து அதற்கு அதிகாரம் அளித்ததன் மூலமும் ஜே.வி.பி. யை ஒடுக்க இராணுவத்திற்கு அதிகாரம் அளித்ததின் மூலமும் இராணுவம் அரசியலில் முக்கியத்துவமும் ஓரளவு முனைப்பும் பெற்றுவிட்டது. ஒரு சிறு வெடிப்புக்குள்ளால்கூட இராணுவம் தன் தலையை நிமிர்த்திவிடும். இந்த வகையில் அரசியல் அதிகாரத்திலுள்ளோர் இராணுவத்தினைத் திருப்திப்படுத்த வேண்டுமாயின் பேரினவாதத்தைப் பெரிதும் தழுவவேண்டியவர்களாயுள்ளனர்.

இந்த வகையில் பேரினவாதத்தைப் பல்வகையிலும் தழுவிக்கொள்ளும் ஒரு தலைவரே பிரேமதாசா ஆவார். சிங்கள பௌத்த பேரினவாதமானது தமிழ் பேசும் மக்களுக்கு எதிரானது. ஆதலினால் சிங்கள பௌத்த பேரினவாதத்திற்குத் தலைமை தாங்கும் எந்தொரு தலைவனும் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை மதித்து நடக்கப் போவதில்லை. இத்தகைய தலைவர்கள் தம்மைப் பலப்படுத்துதற்குத் தற்காலிக சமாதானத் தோரணைகளைக் கட்டி எழுப்புவார்கள். ஆனால் உண்மையில் இவர்களால் சமாதான புருஷர்களாய் இருக்கமுடியாது.

எம். கே. எஸ்.

# ஆர்ஜென்ரீனா இத்தாலி வெற்றி

(ரோம்)

## ஒரே சமயம் இரு குண்டு வெடிப்பு

(புதுடில்லி)

மணிப்பூரில் ஒரே சமயம் இடம்பெற்ற இரு குண்டு

# முதலுதவி சிகிச்சையில் பயிற்சியளிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தற்போது வடக்கு கிழக்கு பகுதிகளில் ஸ்ரீ லங்கா இனவாத அரசினால் மேற்கொள்

விரும்பும் சகல மாணவர்களும் தமது பெயர்களை மறுமலர்ச்சிக் கழக அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள

சுதந்திரம் பெற்ற ஓராண்டுக்குள் 1949 ஆம் ஆண்டு மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளரின் குடியுரிமை பறிக்கப்பட்டது.

1950 ஆம் ஆண்டிலிருந்து திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மண் பறிக்கப்பட்டது; இன்றும் தொடர்ந்து பறிக்கப்பட்டு வருகிறது.

1956 ஆம் ஆண்டில் தமிழ் மக்களின் உரிமை பறிக்கப்பட்டது. தொடர்ந்து தமிழ் மக்கள் கொழும்பிலும் இங்கினியாகல அம்பாறையிலும் தாக்கப்பட்டார்கள்.

1958 ஆம் ஆண்டில் தூண்டிவிடப்பட்ட இனக்கலவரம் 1983 ஆம்ஆண்டு வரை காலத்துக்குக்காலம் ஏற்படுத்தப்பட்டு தமிழ் மக்களின் உயிரும் உடைமைகளும் சூறையாடுவது வழக்கமான நடைமுறையாக்கப்பட்டது.

சிங்கள பௌத்த பேரினவாதிகளின் பிரதிநிதியாக இன்று ஆட்சிபீடத்திலிருக்கும் பிரேமதாசா அரசு தமிழ் மக்களுக்கு எதிராகப் போர் தொடுத்திருக்கிறது.

இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் போர் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவும் அவரது சகாவான பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவும் கூறி வருகின்றனர்.

ஆனால் தமிழருக்கு எதிரான இந்தப் போரில் வெற்றி கொள்வதற்காக சிங்கள இளைஞர்களை மேலும் புதிதாகப்பட்டாளத்தில் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

தேசிய பாதுகாப்பு நிதி என்று தமிழ் மக்களுக்கு எதிரான போரை வலுப்படுத்துவதற்கு சிறிலங்கா அரசு நிதி திரட்டி வருகிறது.

இதேசமயம் தமிழ்ப் பகுதிகளில் விமானங்களிலிருந்து தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் குண்டுமாரி பொழிகிறது; ஹெலியிலிருந்து கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படுகிறது. இராணுவ முகாம்களிலிருந்து தமிழ் மக்கள் வாழும் பகுதிகள்மீது கண்மூடித்தனமாக ஷெல்கள் அடிக்கப்படுகின்றன. கடல்பகுதிகளிலிருந்து குடிமனைப் பகுதிகள்மீது கண்டபடி பீரங்கித் தாக்குதல் நடத்தப்படுகிறது.

இத்தாக்குதல்களினால் கொல்லப்பட்டவர்கள் தமிழ்ப் பொதுமக்கள்தான்; இன்றும் கொல்லப்பட்டுக் கொண்டிருப்பவர்களும் தமிழ் மக்களே.

குண்டுத்தாக்குதல்களினாலும் பீரங்கித் தாக்குதல்களினாலும் அழிந்து கொண்டிருக்கும் வீடுகள், கடைகள், பாடசாலைக் கட்டிடங்கள் யாவும் தமிழ் மக்களுடையனவே!

இராணுவம் வெளியே வரக்கூடிய பகுதிகளில் உதாரணமாக மட்டக்களப்பின்; சில பகுதிகளிலும் திருக்கோணமலைப் பகுதிகள் சிலவற்றிலும் அகதிகளாகத் தஞ்சமடைந்த பெண்களையே சிறிலங்கா இராணுவம் மானபங்கம் செய்திருக்கிறது.

இவர்கள் எல்லாம் தமிழ்ப் பொதுமக்கள் அல்லாமல் ஆயுதம் ஏந்திப் போராடும் போராளிகளா?

இப்பொழுது நடைபெறும் யுத்தம் நீதிக்கும் அநியாயத்துக்கும் நடைபெறும் யுத்தம் என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறுகிறார்.

தமிழ்ப் பொதுமக்கள் தாக்கப்படுவதிலிருந்து பிரேமதாசா சொல்லும் நீதி எது அநீதி எது என்பது தெரியும்.

சிறிலங்கா சிங்கள அரசும் சிங்கள பௌத்த பேரினவாதிகளும் தமிழ் மக்களுக்கு எதிராகப் பெரும் போருக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் போது தமிழ் மக்கள் யுத்தத்தைப் பற்றிச் சிந்திப்பதாகவே தெரியவில்லை.

எங்கே இடம்பெயர்ந்து சென்றால் இலவச பங்கீடு பெறலாம் என்பது பற்றியும் இராணுவம் வெளியே வந்தால் எங்கே ஒடித்தப்பலாமென்றுமே பொதுமக்கள் பலரும் விமர்சிப்பதையே காணக்கூடியதாக இருக்கிறது.

யாரோ போராடவேண்டும், தியாகம்செய்யவேண்டும் நாம் சுதந்திரத்தை அனுபவிக்கவேண்டுமென்ற மனப்பான்மையே தமிழ் மக்கள் மத்தியில் இன்னமும் நிலவுவதாகத் தெரிகிறது.

இனியும் இந்த மனப்பான்மை நீடிக்கக்கூடாது, சுதந்திரம் சும்மாகிடைக்காது, போராடித்தான் பெறவேண்டும்.

இதற்கு ஒரேவழி போர்க்களத்தில் நிற்கும் புலிகளின் பின்னால் அணிதிரள்வதேயாகும்.

அக்கறையுள்ளவர் என்ற அடிப்படையிலோ, அல்லது தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளக் கூடிய மனப்பக்கு வமும் வல்லமையும் உள்ளவர் என்ற அடிப்படையிலோ அப் பேச்சுவார்த்தைகள் நிகழ வில்லை. யாரை யார் முந்து வது என்ற உள்நோக்கங்

பிக்குக்களுடனும் கூட்டுச் சேர்ந்து எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு அரசியரீதியிற் தலைமை தாங் கினார். இக்கால கட்டத்தில் 1955 ஆம் ஆண்டு பௌத்த விசாரணைக்குழு தனது அறிக் கையைத் தயாரித்தது. பௌத்த சாசனத்திற்கு என

உயர்குழாத்தவர்களே ஆட்சி அதிகாரத்திற்கு வருவது வழக் கம். பிரேமா கொய்கம சாதியையோ அன்றி உயர் குழாத்தையோ சேராதவர். அந்த வகையிலும் இவர் பல மற்ற பின்னணியைக் கொண்டவர். உயர்குழாத்

புறமும், அதேவேளை இரா ணுவத்தினரை தாசாபண்ணு வதற்காக அவர்களுக்கு விட் டுக் கொடுப்புக்களைச் செய்ய வேண்டியதேவை மறுபுறமும் இவருக்கு உண்டு. இதிலுள்ள இரண்டு அம்சங்களும் ஒரு முடிவையே கொண்டுவரும்.

தில்லை. இத்தகைய தலை வர்கள் தம்மைப் பலப்படுத்து தற்குத் தற்காலிக சமாதா னத் தோரணைகளைக் கட்டி எழுப்புவார்கள். ஆனால் உண்மையில் இவர்களால் சமாதான புருஷர்களாய் இருக்கமுடியாது.

# ஆர்ஜென்ரீனா இத்தாலி வெற்றி

(ரோம்)

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின் கால் இறுதியாட்டங்கள் ஆரம்பித்துவிட்டன. சனியன்று நடைபெற்ற முதல் இரண்டு ஆட்டங்களில் ஒன்றான ஆர்ஜென்ரீனா யூகோஸ்லாவியா ஆட்டத்தில் பெனால்டி முறையில் 3-2 என்ற கோல் வித்தியாசத்தில் ஆர்ஜன்ரீனா வென்று அரை இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுகின்றது.

இதேவேளை 1-0 என்ற கோல் வித்தியாசத்தில் இத்தாலி அயர்லாந்தைத் தோற்கடித்து அரை இறுதியாட்டத்துக்குத் தகுதி பெறுகின்றது.

இதன்படி நாளை முதலாவது அரை இறுதியாட்டத்தில் இத்தாலி ஆர்ஜென்ரீனாவை எதிர்த்தாடும்.

நான்காம் திகதி இரண்டாவது அரை இறுதியாட்டம் நடைபெறும். இவ்வாட்டத்தில் ஞாயிறன்று நடைபெற்ற ஆட்டத்தில் வெற்றி கண்ட நாடுகள் ஒன்றையொன்று எதிர்த்தாடும்.

## இந்திய தளபதி ஓய்வு பெற்றார்

(புதுடில்லி)

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் சர்மா தனது நாற்பது ஆண்டு கால இராணுவ சேவைக்குப்பின் தனது பதவியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

பதற்றமான சூழ்நிலையிலும் அரசியல் நிலமையிலும் இந்தியா திறமையான பாதுகாப்பு படைகளைக் கொண்டு நன்கு செயற்பட்டு வருவதாக அவர் கூறினார்.

## ஒரே சமயம் இரு குண்டு வெடிப்பு

(புதுடில்லி)

மணிப்பூரில் ஒரே சமயம் இடம்பெற்ற இரு குண்டு வெடிப்பு சம்பவங்களில் மூன்று பொலிஸார் உட்பட பன்னிரண்டு பேர் காயம் அடைந்தனர்.

இங்குள்ள சந்தைப் பகுதியில் பொலிசார் மீது குண்டு வீச்சுத் தாக்குதல் நடாத்தப்பட்டதில் இரு பொலிசார் காயமடைந்தனர்.

பஸ் நிலையம் ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் ஒன்பது பேர் காயமடைந்தனர்.

## ஜனாதிபதி திரும்பினார்

(லுஸாக்கா)

நேற்று முன்தினம் ஸாம்பியாவில் இடம்பெற்ற சதிப் புரட்சி முயற்சியைத் தொடர்ந்து வெளியிடம் சென்றிருந்த ஸாம்பியா ஜனாதிபதி கெனத் கௌண்டா தற்போது தலைநகர் லுஸாக்கா திரும்பியுள்ளார்.

## பிரேமதாசா கலந்து கொள்ளார்

(கொழும்பு)

மாலைதீவில் நடைபெற இருக்கும் ''சார்க்'' உச்சி மாநாட்டில் ஜனாதிபதி பிரேமதாசா கலந்துகொள்ள மாட்டார் என வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையின் தற்போது உள்ள நிலமைகளால் அவர் செல்ல மாட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# முதலுதவி சிகிச்சையில் பயிற்சியளிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தற்போது வடக்கு கிழக்கு பகுதிகளில் ஸ்ரீ லங்கா இனவாத அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்மூடித்தனமான போர் விமானங்களின் குண்டு வீச்சினாலும் ஹெலித் தாக்குதல்களினாலும் மற்றும் ஷெல் தாக்குதல்களினாலும் நாளுக்கு நாள் காயமடையும் மக்களிற்கு உடனடியாக உதவுவதற்காக சகல பிரதேசங்களிலிருந்தும் கல்வி பயிலும் யாழ் பல்கலைக் கழக மாணவர்களிற்கு முதலுதவி சிகிச்சைக்கான பயிற்சி வகுப்பினை நடாத்துவதற்கு மறுமலர்ச்சிக் கழகம் ஒழுங்கு செய்துள்ளது.

இந்த முதலுதவி பயிற்சி வகுப்பானது எதிர்வரும் 4 ஆம் திகதி முதல் காலை 9.00 மணிக்கு யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறும். இந்த வகுப்பில் இணைந்து கொள்ள விரும்பும் சகல மாணவர்களும் தமது பெயர்களை மறுமலர்ச்சிக் கழக அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

## பதிவு செய்ய கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடச்கு கிழக்கு பகுதிகளில் ஸ்ரீ லங்கா இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களின் காரணமாக தமது சொந்த இடங்களிற்கு செல்ல முடியாத திருக்கோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விஞ்ஞான பீட மாணவர்கள் தமது பெயர்களை விஞ்ஞான பீட மாணவர் ஒன்றிய நிர்வாகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள் என்று ஒன்றிய உப தலைவர் கோரியுள்ளார்.

## அகதிகளுக்கு உதவிகள் இல்லை

(விசேட நிருபர்)

கொட்டடி, நாவாந்துறைப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வண்-வடமேற்கு வெற்றிமாதா ஆலயம், முருகமூர்த்தி ஆலயம், அயலில் உள்ள வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களுக்கான நிவாரண உதவிகளை இதுவரையில் எவரும் செய்ய முன்வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

உணவு, குடிநீர், தங்குமிட சுகாதார வசதிகள் இன்னமும் இவர்களுக்கு கிடைக்கவில்லை. (21)

## மடுமாதா உற்சவம்

(மன்னார்)

மடுமாதா ஆலய வருடாந்த ஆடிமாத திருநாள் இம்முறை சிறப்பாக நடைபெறவில்லை. எனினும் இங்கு தங்கியுள்ள பெருமளவு அகதிகள் இத் திருநாளில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் வரமுடியாதவர்களும் இடம்பெயர்ந்த வவுனியா, திருமலை பகுதி அகதிகளும் பலர் இங்கு தங்கியுள்ளனர்.

## மாணவருக்கு இங்கு வசதி

(தீவுப்பகுதி)

யாழ். குடநாட்டு அசம்பாவித சம்பவங்களினால் அப்பகுதி பாடசாலைகள் செயல்பட முடியாத நிலையில் உள்ளதனால் அங்கு கல்விபயிலும் தீவுப்பகுதியை சேர்ந்த மாணவர்கள் தீவுப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் தற்காலிகமாக கல்வி பயில அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறை தவிர மற்றும் இப்பகுதி பாடசாலைகள் ஓரளவு இயங்கி வருகின்றன. (15)

# பங்களாதேஷில் வெள்ள அழிவு 5 லட்சம் பேரை காணவில்லை

(டாக்கா)

பிரமபுத்திரா நதி பெருக்கெடுத்துள்ளதால் ஏற்பட்ட வெள்ள பெருக்கினால் சுமார் ஐந்து லட்சம் பேர் வரை நீரில் மூழ்கி மரணமாகியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இதனால் மூவாயிரம் கிராமங்களும் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் எனவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பதினையாயிரம் குடும்பங்கள் வீடுகளை இழந்து அகதிகளாக்கப்பட்டுள்ளன.

50 000 ஹெக்டேர் நில நெற் பயிர்ச்செய்கை அழிந்துள்ளது.

# அரபு நாடுகளுக்கு பெனாசிர் செல்லமாட்டார்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனாசிர் பூட்டோ மேற்கொள்ளவிருந்த அரபு நாடுகளின் விஜயத்தை ஒத்திப்போடுமாறு மூன்று அரபு நாடுகள் பாகிஸ்தான் பிரதமரிடம் கேட்டுள்ளன.

கடந்த மே மாதம் திருமதி பெனாசிர் பூட்டோ வளைகுடா மற்றும் சில அரபு நாடுகளுக்கு சென்றிருந்தார்.

காஷ்மீர் பிரச்சினை காரணமாக பாகிஸ்தானுக்கு ஆதரவு தேடியே அவர் இந்த நாடுகளுக்கு சென்று வருகிறார்.

தற்போது இந்தியாவுடன் சமாதானப் பேச்சுக்கு ஆ''த்தம் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் திருமதி பூட்டோ இங்கு வருவது உகந்தது அல்ல என்று ஓமான், சுட்டாக், குவைத், ஐக்கிய அரபு எமிரேற்ஸ் ஆகிய நாடுகள் கருத்து தெரிவித்துள்ளன.

# வெளிநாட்டு பிரஜைகளுக்கு அமெரிக்காவில் புகலிடம்

## விரைவில் புதிய சட்டமூலம்

(நியூயோர்க்)

வெளிநாடடவர்கள் அமெரிக்காவில் புகலிடம் கோருவதற்கு ஏற்ப புதிய சட்ட மூலம் கொண்டு வரப்படவுள்ளது.

இந்தச் சட்ட மூலங்களை விரைவில் அமுலாக்க அமெரிக்க நீதியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளிநாடுகளில் மனித உரிமைகள் மீறப்படுவதால் பாதிக்கப்படுபவர்களின் விபரங்களை சேகரிக்கும் நிலையம் ஒன்றும் இதற்கு முன்னோடியாக அமெரிககாவில் நிறுவப்படும்.

Registered as a News Paper at the G. P. O.

# ஈழநாதம்

# முன்பு கப்பலில் வந்த தமிழர் நேற்று லொறிகளில் அகதிகளாய் வந்தனர்!

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து தரை மார்க்கமாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்கள். இவர்கள் யாழ்ப்பாணத்திற்கு இருபத்திஐந்து லொறிகளில் வந்தார்கள்.

1958, 1977, 1983ஆம் ஆண்டுகளின் பின் கொழும்பில் இருந்து தமிழர்கள் பெரிய அளவில் அகதிகளாக நேற்று வந்து சேர்ந்தார்கள். கடந்த காலங்களில் கொழும்பில் இருந்து கப்பல்களில் வர அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்தது. இம்முறை அரசாங்கம் பெரிய அளவினதான ஏற்பாடுகள் எதையும் செய்யவில்லை.

நேற்றுமுன்தினம் கொழும்பு கதிரேசன் கோயிலிலிருந்து லொறிகளிலும், பஸ்களிலுமாக இவர்கள் புறப்பட்டு வந்தார்கள். இவர்களுடைய பயணத்திற்கு வவுனியா மாவட்ட எம். பி. திருமதி ராஜமனோகரி புலேந்திரன் உதவியதாக பயணிகள் தெரிவித்தனர்.

மதவாச்சியில் இருந்து பிரயாணம் பிரதான வீதியூடாக அல்லாமல் காட்டுப்பாதையூடாக இருந்தமையால் பிரயாணம் கடுமையானதாக இருந்ததாக பிரயாணிகள் தெரிவித்தார்கள். இவர்களுடைய ஆடைகள் சேறும் சகதியுமாகவும் இருந்தது.

வெள்ளைக் கொடிகளுடன் எமது வாகனங்கள்வவுனியவை அண்மித்துக் கொண்டிருந்த வேளை திடீரென மறித்த சிங்களக் காடையர்களின் குழு ஒன்றினால் ''உங்களுக்கு என்னடா|சமாதானம்?'' என்று கூறி குண்டாந்தடிகளால் தாக்கப்பட்டோம் எனப் பயணிகள் தெரிவித்தார்கள்.

அத்துடன்வெள்ளைக்கொடிகளை முறித்தெறிந்ததுடன் தலைவெடித்து இரத்தம் ஓட ஓட அடி விழுந்ததாகவும் பல ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான பொருட்களை பறிகொடுத்து விட்டதாகவும் நேற்று வந்திறங்கிய பயணிகள் தெரிவித்தனர். (லோ)

## இன்றைய நிலைமையால் தீவுப்பகுதி பெரும் பாதிப்பு

(தீவுப்பகுதி)

தற்போது தீவுப்பகுதி மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் விளங்குகின்றது. இப்பகுதிகளில் உணவுப் பொருட்களுக்கும், எரிபொருட்களுக்கும் மிகவும்தட்டுப்பாடுநிலவுகிறது.

கடந்த பத்து நாட்களுக்கு மேலாக தீவுப்பகுதிக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

இப்பகுதி குழாய் குடி நீர் விநியோகங்களும் தடைப்பட்டுள்ளது.

தற்போது அராலி கடற்பாதை தான் தீவுப்பகுதி மக்களுக்கான பிரதான பாதையாக உபயோகிக்கப்பட்டுவருகின்றது. அடிக்கடி இப்பாதையால் பிரயாணம் செய்வோர் மீது ஹெலிகொப்டர் தாக்குதல்களும் இடம்பெற்றுவருகின்றன.

ஹெலி வட்டமிட்டதும் படகில் பிரயாணம் செய்யும் ஆண், பெண், சிறுவர், வயோதிபர்யாவரும்கடலில்பாய்ந்து உயிர்தப்பி விடுகின்றார்கள். (15)

## விபத்தில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த லொறி ஒன்றும், பஸ்சும் மடுவீதியில் வந்து கொண்டிருந்த சமயம் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இளைஞர் ஒருவரின் கால் முறிந்ததாகவும் மற்றுமொருவரின் தோள் எலும்பு விலகிவிட்டதாகவும் அவ் வாகனத்தில் பிரயாணம் செய்த பயணிகள் தெரிவித்தனர். (லோ)

## கூட்டுறவு சிக்கன கடன்வழங்கும் சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச காரியாலயம் ஸ்ரான்லி வீதியில் இருந்து நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயத்திற்கு தற்காலிகமாக இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அங்கத்துவ சங்கங்கள்புதிய முகவரியில் தங்களது தொடர்புகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

சகல ஊழியர்களையும், வெளிக்கள உத்தியோகத்தர்களையும் இன்று (2-7-90) காலை 9-00 மணிக்கு புதிய முகவரியில் வந்து சமுகமளிக்குமாறு சமாசத் தலைவர் கேட்டுள்ளார்.

## சிறுபோக நெற்செய்கை நீரின்மையால் அழியும் ஆபத்து

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் சிறுபோக வேளாண்மை நீரின்றி செத்துமடியும் நிலைக்குள்ளாகியதால் விவசாயிகள் பெரும் கவலையடைந்து காணப்படுகின்றனர்.

இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்து வருவதால் பிந்தி விதைத்தவர்களின் வயல்களுக்கு நீர்கிடையாமல் போகக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

இதுதவிரவன்னேரிக்குளத்து நீரும் மிகவும்குறைந்து வாய்க்காலுக்கு நீர்செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. உடனடியாக இவ்விடயம் அப்பகுதி கிராமசேவகர் இரா. தியாகலிங்கத்தினால் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். வேலுப்பிள்ளை குளத்திலிருந்து நீர்இறைக்கும் இயந்திரம் மூலம் நீரை வெளியே கொண்டுவந்து வயல்களுக்கு விடுவதற்காக பாரிய நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை வழங்கியுள்ளார்.

எரிபொருள் தட்டுப்பாடு நிலவிவருவதால் நீரை இறைத்து வயலுக்கு செலுத்துவதில் சில கஷ்டங்கள் இருப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர். (49)

## மருந்துக்கு தட்டுப்பாடு

(தீவுப்பகுதி)

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை, வேலணைக் கிராமிய ஆஸ்பத்திரி என்பனவற்றிற்கான மருந்து வகைகள் தட்டுப்பாடாக உள்ளது.

அதேவேளை வேலணை கிராமிய ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் வைத்திய அதிகாரியும் லீவில் சென்று நீண்ட நாட்களாகியும் இங்கு வரவில்லை. இங்கு தற்காலிகமாக ஊர்காவற்றுறை மாவட்ட ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் உதவி வைத்திய அதிகாரி ஒருவரும், கடமைக்குச் செல்ல முடியாது இங்கு கையொப்பமிட்டு வரும் ஒரு உதவி வைத்திய அதிகாரியுமே இங்கு கடமையாற்றி வருகின்றனர். (15)

## முகாம்களில் சேவை செய்ய வைத்திய குழு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை. ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரிகளும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையும் மூடப்பட்டிருப்பதால் காயப்பட்டவர்களுக்கும் நோயாளிகளான அகதிகளுக்கும் சேவை செய்யும் நோக்கத்தோடு மேற்படி ஆஸ்பத்திரிகளைச் சேர்ந்த டாக்டர்கள் அகதி முகாம்களில் வேலை செய்ய முன்வந்துள்ளார்கள்.

வடமராட்சி கிழக்கில் அமைந்துள்ள அகதிகள் முகாமில் 500க்கு அதிகமான திருக்கோணமலை அகதிகள் தங்கியுள்ளார்கள். அங்கேயே முகாமிட்டு இவர்களின் வைத்திய சேவைகளைக் கவனிக்க மூடப்பட்டிருக்கும் மேற்படி வைத்தியசாலைகளில் கடமை புரிந்த வைத்தியர் குழு ஒன்று முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தீவுப்பகுதியில் அகதிகள் அதிகரிப்பு நிறுவனங்கள் உதவி

(வேலணை)

வேலணை புங்குடுதீவுப் பகுதிகளில் அதிகமாக அகதிகள் தங்கியுள்ளனர். இந்த அகதிகளுக்கு வேலணை உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் நிவாரண உதவிகளைச் செய்து வருகிறது.

இப்பகுதிகளில் உள்ள பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நிவாரண உணவுப் பொருட்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேபோல ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு காரியாலயமும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

செஞ்சிலுவைச் சங்கம், போரூட், றெட்பானா ஆகிய நிறுவனங்களும், அவ்வப்பகுதி சனசமூக நிலையங்களும், சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம், கிராம முன்னேற்றச் சங்கங்கள், இந்து இளைஞர் மன்றங்கள், வர்த்தகர் சங்கங்கள், தர்ம ஸ்தாபனங்கள் என்பனவும் தம்மாலான உதவிகளை மேற்கொண்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ளவர்கள் மட்டுமன்றி கிழக்குப்பகுதி, கிளிநொச்சி, வன்னி ஆகிய இடங்களில் உள்ளவர்களும் இப்பகுதிகளில் வந்து பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் தங்கியுள்ளனர்.

தினமும் இந்த அகதிகளின் தொகை அதிகரித்துக் கொண்டுவருவதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இனப்படுகொலை . . .
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து பிரதமர் வி. பி. சிங்குக்கு மேற்படி கட்சியால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அவசர தந்தி ஒன்றிலேயே இந்தக் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. திரு. எஸ். மாதவன், திரு. கே. காளிமுத்து, லோகசபையின் முன்னாள் துணை சபாநாயகர் திரு. எம். தம்பித்துரை ஆகியோர் இத் தந்தியில் கையொப்பம் இட்டுள்ளனர்.

அனைத்திந்திய அ. தி. மு. கவின் பதினைந்துபேர் கொண்ட நாடாளுமன்றக் குழுவினால் பிரதமர் திரு. வி. பி. சிங்குக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்த அவசரத் தந்தியில் ''இலங்கை அரசினால் தமிழ்மக்கள்மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் இனப்படு கொலைகளைத்தடுத்து நிறுத்தும் வகையில் இந்திய உட

## ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி இடமாற்றப்பட்டுள்ளது

(தீவுப்பகுதி)

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை மீண்டும் வேலணையில் இருந்து இடம் மாற்றப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைப்பகுதியில் நிலைமை சீராக இருப்பதாகவும், உடனடியாக இதனை வேலணையில் இருந்து ஊர்காவற்றுறைக்கு மாற்றும்படி

இது இவ்வாறு இருக்க ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் இருந்து வேலணை ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் வண்டி மூலம் வந்து ஷெல்தாக்குதல் காயங்களுக்கு சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகள் அங்குள்ள பாதகமான நிலைமை காரணமாக மீண்டும் அங்கு செல்ல மறுப்புத் தெரிவித்து

## சுகாதார ஊழியர்கள் அகதிமுகாமில் சேவைசெய்க

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை சுகாதாரப் பிரிவின் கீழ் சேவையாற்றும்

ஆகியோரை அவர்களின் வதிவிடங்களிற்கு அண்மையிலுள்ள அகதி முகாம்களில்

## போராளிகளுக்கு உதவுவோர் அனுமதியுடன் உதவவும்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரச படைகளுக்கு எதிராக களத்தில் ஈடுபட்டிருக்கும் போராளிகளுக்கு உணவோ அல்லது வேறு உதவிகளோ வழங்க விரும்புவோர், அவைகளை அவ்வப் பகுதி பிரதேசப் பொறுப்பாளரை அணுகி அவரின் அனுமதியுடன் வழங்குமாறு வலிகாமம் பிரிவு தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையில் தற்பொழுது மக்களிடமிருந்து உணவு பெறும் விடயத்தில் சில துஷ்பிரயோகங்கள் இடம் பெறுவதினாலேயே இந்தப் புதிய அணுகுமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## வெளிநாட்டு பத்திரிகையாளர் வாகனம் மீது ஹெலி சூடு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நோக்கிவந்து கொண்டிருந்த வெளிநாட்டு

ஹெலிகள் இணைந்து நடத்தியுள்ளன.

கடந்த வியாழக்கிழமை பிரிட்டிஷ் நாட்டைச்

செய்யும் நோக்கத்தோடு மேற்படி ஆஸ்பத்திரிகளைச் சேர்ந்த டாக்டர்கள் அகதி முகாம்களில் வேலை செய்ய முன்வந்துள்ளார்கள்.

வைத்தியசாலைகளில் கடமை புரிந்த வைத்தியர் குழு ஒன்று முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கள் மூலமாக நிவாரண உணவுப் பொருட்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேபோல ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு காரியாலயமும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

செஞ்சிலுவைச் சங்கம், போரூட், றெட்பானா ஆகிய நிறுவனங்களும், அவ்வப்பகுதி உள்ளவர்கள் மட்டுமன்றி கிழக்குப்பகுதி, கிளிநொச்சி, வன்னி ஆகிய இடங்களில் உள்ளவர்களும் இப்பகுதிகளில் வந்து பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் தங்கியுள்ளனர்.

தினமும் இந்த அகதிகளின் தொகை அதிகரித்துக் கொண்டுவருவதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி இடமாற்றப்பட்டுள்ளது

(தீவுப்பகுதி)

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை மீண்டும் வேலணையில் இருந்து இடம் மாற்றப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைப்பகுதியில் நிலைமை சீராக இருப்பதாகவும், உடனடியாக இதனை வேலணையில் இருந்து ஊர்காவற்றுறைக்கு மாற்றும்படியும் மேற்படி ஆஸ்பத்திரியின் அபிவிருத்திச்சபைத் தலைவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க மாற்றப்பட்டுள்ளது,

இது இவ்வாறு இருக்க ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் இருந்து வேலணை ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் வண்டி மூலம் வந்து ஷெல்தாக்குதல் காயங்களுக்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் அங்குள்ள பாதகமான நிலைமை காரணமாக மீண்டும் அங்கு செல்ல மறுப்புத் தெரிவித்து வேலணை ஆஸ்பத்திரியிலேயே சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிப்பக்கம் காரைநகர் கடற்படையினர் ஷெல் குண்டுகள் வீழ்ந்து வெடிப்பதன் காரணமாக அங்கு நோயாளர்கள் செல்ல அச்சம் தெரிவிக்கின்றனர். (15)

## இராணுவ...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

வோம்என பயப்பட்டதனால் போலும் தொடர்ந்து எம்முடன் வரவில்லை.

கால்நடையாக பெண்களும் குழந்தைகளும் உட்பட ஓமந்தையை அடைந்தோம். இவ்வேளை நாம் எமது நாட்டில் நிற்பது போன்ற உணர்வு எம்மை ஆட்கொண்டது. அங்கிருந்து சிறிது தூரம் சென்றதும்எம்மை நான்கு தமிழீழ விடுதலைப் போராளிகள் எதிர்கொண்டு வரவேற்றனர், அவர்கள் எமக்கு தாகம் தீர தண்ணீர் தந்தனர். சுதந்திர தாகம்கொண்ட இவ் வீரர்கள் எமதுதாகத்தை தீர்த்தபொழுது நாம் கண் கலங்கினோம்.

தொடர்ந்து நாலரை மணி நேர பிரயாணத்தின் பின் ஒரு லொறி மூலம் பூநகரி பாதையை அடைந்து அதனை கடக்க வேண்டிய கட்டாயத்திற்குட்பட்டபோதிலும் எரிபொருள் தேவை ஏற்பட்டதால் நாம் திண்டாடியபோது விடுதலைப் புலிகள் எரிபொருள் உதவியை செய்து எம்மை வழியனுப்பி வைத்தனர்.

பாதை மூலம் மறுகரையடைந்து தொடர்ந்து லொறி மூலம் அதிகாலை மூன்று முப்பது மணியளவில் நல்லூர் கந்தன் ஆலயத்தை வந்தடைந்து அங்கிருந்து கால்நடையாக எனது வீட்டிற்கு செல்லும்போது நாவலர் ரோட்டில் சில தெருநாய்கள் துரத்தியபோதிலும் எதுவித கடிகாயங்களுக்கும் உட்படாது வீட்டை வந்தடைந்தேன் என அந்த கொழும்பு யாழ். பயணி பெருமையாக கூறிக் கொண்டார்.

## புதிய ஜெனரேட்டர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு பெரியதொரு ஜெனரேட்டர் புதிதாக கொண்டுவரப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேச சுகாதாரக் குழுவினரும், தென்மராட்சி நோயாளர் நலன்புரி சங்கத்தினரும் எடுத்துக் கொண்ட விடா முயற்சி காரணமாகவே இந்த ஜெனரேட்டர் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டது.

இந்தப் புதிய ஜெனரேட்டர் கொண்டு வரப்பட்டதையிட்டு பொது மக்கள் பெரிதும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். (35)

## பவுசர் மூலம் குடிநீர் வழங்கல்

(தீவுப்பகுதி)

மின்சாரமின்மையால் பாதிப்படைந்திருக்கும் குழாய்குடிநீர் விநியோகத்திற்கு பதிலாக வேலணை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் தனது குடிநீர் வழக்கும் பவுசர் வண்டி மூலம் வேலணைப்பகுதிக்கு நன்னீர் வழங்கி வருகிறது.

அத்துடன் வேலணை ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சபையின் வேண்டுகோளுக்கிணங்க ஆஸ்பத்திரிக்கு இலவசமாக குடிநீரையும்தினமும் மேற்படி சங்கம் வழங்கிவருகிறது, (15)

# சுகாதார ஊழியர்கள் அகதிமுகாமில் சேவைசெய்க

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை சுகாதாரப் பிரிவின் கீழ் சேவையாற்றும் பொது சுகாதார உத்தியோகத்தர்கள், கிராமிய சுகாதார உதவியாளர், மருத்துவ மாதுக்கள், தரிசிப்பாளர்கள், ஏனைய ஊழியர்கள் ஆகியோரை அவர்களின் வதிவிடங்களிற்கு அண்மையிலுள்ள அகதி முகாம்களில் சுகாதார சேவையை மேற்கொள்ளுமாறு மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். தெய்வேந்திரன்கேட்டுள்ளார்.

மருந்துப் பொருட்கள் பற்றாக்குறையாக இருந்தால் யாழ். செஞ்சிலுவைச் சங்கக் கட்டடத்தில் தம்மிடம் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (மு)

## வற்றாப்பளை கோயில் மீது ஹெலி தாக்குதல்

(முல்லைத்தீவு)

வற்றாப்பளை அம்பாள் ஆலய அகதிகள் மீது ஹெலி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் கோயில் கட்டிடமும், ஓடுகளும் சேதமடைந்தன. 800 க்கும் அதிகமான அகதிகள் மயிரிழையில் உயிர் தப்பினர். (58)

## யாழ். போதனா

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து 'நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஆலோசனை செய்துள்ளார். தற்போது மீண்டும் அரசுத் தலைவர்களுடன் கலந்தாலோசனை நடத்துவதற்காக திரும்பவும் நேற்று முன்தினம் கொழும்பு சென்றுள்ளார்.

காயமடைந்த போராளிகளும் இராணுவ சிப்பாய்களும் பாரபட்சமின்றி சிகிச்சை பெறுவது, ஆயுதங்களுடன் எந்தத் தரப்பினரும் ஆஸ்பத்திரிக்குள் பிரவேசிப்பதைத் தவிர்ப்பது, ஆஸ்பத்திரியையும் அதன் சுற்றாடலையும் அமைதிப் பிராந்தியமாகப் பேணுவது ஆகியன பற்றியே பேச்சுவார்த்தைகளில் ஆராயப்படுவதாகவும் தெரியவருகிறது.

ஸ்ரீலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் யுத்தம் ஆரம்பித்து யாழ். போதனா ஆஸ்பத்திரி உட்பட யாழ். நகரின் பல பகுதிகளும் ஷெல் ஏவுகணைத் தாக்குதலுக்கும் விமானக் குண்டு வீச்சுக்கும் இலக்கானதை அடுத்து இம் மாதம் நடுப் பகுதியில் யாழ். போதனா ஆஸ்பத்திரி மூடப்பட்டது தெரிந்ததே. (75)

## மன்னார்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் தரப்பில் நிசாம்(பரப்புக்கடந்தான்) மரணமடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

### 27 படையினர் காயம்

அதேவேளை புத்தளத்திலிருந்து வந்துகொண்டிருந்த இராணுவ அணியொன்று தமிழீழ விடுதலைப்புலிகளால் பள்ளக்குழி, முகத்துவாரம் ஆகிய இடங்களில் வைத்து தாக்கப்பட்டதாக இலங்கை அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டது:

இத் தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதுடன்; ஒரு அதிகாரி உட்பட 27 இராணுவத்தினர் பலத்த காயமடைந்ததாகவும்; இலங்கை வானொலி அறிவித்தது.

## கொழும்பில் கைது . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முகமூடியால் காட்டிக்கொடுக்கப்பட்டு கைது செய்யப்பட்டதாகவும்கொழும்பிலிருந்து வந்திறங்கிய தாய் தெரிவித்தார்.

## இல. தமிழர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யினை மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ள அந்தக்குழு இலங்கையில் தமிழ் மக்கள் நாளாந்தம் கொலை செய்யப்படுதல், சொத்துக்கள் நாசமாக்கப்படுதல் குறித்து மத்திய அரசின் அணுகுமுறைகள் திருப்தி அளிக்கக் கூடியதாக இல்லை என்றும் குறை கூறியுள்ளது.

அவசர தந்தி ஒன்றிலேயே இந்தக் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. திரு. எஸ். மாதவன், திரு. கே. காளிமுத்து, லோகசபையின் முன்னாள் துணை சபாநாயகர் திரு. எம். தம்பித்துரை ஆகியோர் இத் தந்தியில் கையொப்பம் இட்டுள்ளனர்.

அனைத்திந்திய அ. தி. மு. கவின் பதினைந்துபேர் கொண்ட நாடாளுமன்றக் குழுவினால் பிரதமர் திரு. வி. பி. சிங்குக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்த அவசரத் தந்தியில் "இலங்கை அரசினால் தமிழ்மக்கள்மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் இனப்படு கொலைகளைத்தடுத்து நிறுத்தும் வகையில் இந்தியா உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்'' என்ற வேண்டுகோளும் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரச படைகளுக்கு எதிராக களத்தில் ஈடுபட்டிருக்கும் போராளிகளுக்கு உணவோ அல்லது வேறு உதவிகளோ வழங்க விரும்புவோர், அவைகளை அவ்வப் பகுதி பிரதேசப் பொறுப்பாளரை அணுகி அவரின் அனுமதியுடன் வழங்குமாறு வலிகாமம் பிரிவு தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையில் தற்பொழுது மக்களிடமிருந்து உணவு பெறும் விடயத்தில் சில துஷ்பிரயோகங்கள் இடம் பெறுவதினாலேயே இந்தப் புதிய அணுகுமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# வெளிநாட்டு பத்திரிகையாளர் வாகனம் மீது ஹெலி சூடு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நோக்கிவந்து கொண்டிருந்த வெளிநாட்டு பத்திரிகையாளரின் காரை நோக்கியும் ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலை இரண்டு ஹெலிகள் இணைந்து நடத்தியுள்ளன.

கடந்த வியாழக்கிழமை பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் இருவர் பயணம் செய்து கொண்டிருந்த காரை நோக்கி ஓமந்தையில் வைத்து இந்த ஹெலி துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

இரண்டுஹெலிகளிலிருந்தும் நடாத்தப்பட்ட இந்த துப்பாக்கிப் பிரயோகத்தைத் தொடர்ந்து மேற்படி இரு பத்திரிகையாளர்களும் காரை விட்டிறங்கி காட்டு மரங்களுக்குக்கீழ் பதுங்கி பாதுகாப்பு தேடிக்கொண்டதுடன், இத் துப்பாக்கிப் பிரயோக சம்பவம் சுமார் இருபது நிமிடங்கள் இடம்பெற்றதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த இரு பிரிட்டிஷாரும் பத்திரிகையாளர்கள் என்பதற்கு அடையாளமாகக் காரின் கூரையில் PRESS என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்ததுடன், காரில் சமாதானத்துக்கான வெள்ளைக்கொடியும் பறக்கவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தமிழர் போருக்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுள்ளது. இப்படை மேலும் பல மடங்காக உயர வேண்டும். தமிழீழமே தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஆயுதம் ஏந்தவேண்டியகாலம் வந்து விட்டது.

இன்று தமிழீழம் சிங்களஅரசின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லை. குமணையில் இருந்து பருத்தித்துறைவரைபோராட்டம் பரந்து நிற்கின்றது. படிப்படியாக வளர்ந்து வரும் எமது போராட்டம் முழுமையாக வெற்றிபெற வேண்டுமானால் எமக்கு உடனடியான குறுகியகால செயல்திட்டங்களும், நீண்டகால அடிப்படையான செயல்திட்டமும் அவசியம்.

இப்படியான திட்டங்களை செயற்படுத்த எமக்குப் பெருமளவிலானமக்களின் பங்களிப்பும், நிதியும்தேவைப்படுகிறது.

முன்பு போராட்டகால நெருக்கடிகளை ஒரு மாவட்டத்தில் அல்லது ஒரு சிறியபகுதியில் மட்டுமே நாம் பெருமளவில் சந்தித்தோம். இன்று தமிழீழம் முழுவதுமே எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. 5 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் அகதிகளாகஉள்ளனர். போராட்டம் கூர்மை அடைய அடைய நெருக்கடி கூடும். இது கண்டு யாரும் சளைத்து விடக் கூடாது.

இன்றைய மிக நெருக்கடியான காலகட்டத்தில் தமிழ்த் தேசியப் படையான விடுதலைப் புலிகள் தமது ஆட்பலத்தையும், ஆயுத பலத்தையும் பெருக்க வேண்டும். இதற்கு நாம் முன்பு கூறியது போல பெருமளவு நிதி தேவைப்படுகிறது.

எனவே நாம் எமது திட்டத்தின் முதல் கட்டமாக மீளச் செலுத்தும் கடன் திட்டத்தின் அடிப்படையில் தமிழீழ மீட்பு நிதிக்காக ஒவ்வொரு குடும்பத்தில் இருந்தும் குறைந்தது இரண்டு பவுண் தங்கத்தை சேகரிக்க முடிவு செய்துள்ளோம்.

1. 7. 90 இல் இருந்து இத் திட்டம் செயல் முறைக்கு வருகிறது. அன்பார்ந்த தமிழீழ மக்களே நாங்கள் முதலாம் திகதி முதல் தமிழீழ மக்கள் அனைவரையும் பகுதி பகுதியாக சந்தித்துக் கலந்துரையாடுவோம். அப்போது உங்களிடம் ஒரு படிவம் தரப்படும். அப் படிவத்தை அன்றே நிரப்பித் தந்ததும் எந்த வகையில் எப்போது நீங்கள் உங்களது தமிழீழ மீட்பு நிதிக்கான தங்கத்தைத் தரவேண்டும் என்ற விளக்கம் அளிக்கப்படும்.

இக் கலந்துரையாடலின் போது ஒவ்வொரு குடும்பத்தில் இருந்தும் பொறுப்பு வாய்ந்த குடும்ப உறுப்பினர் ஒருவரைக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

### கடன் மீளளிப்பு விபரம்

1. பெறப்பட்ட நகையின் பெறுமதியுடன் (கரட்) இரண்டு கரட் அதிகமாகவுள்ள புலி அடையாளம் பொறிக்கப்பட்ட தங்கப்பதக்கமாக மீளளிக்கப்படும்.
2. குலுக்கல் மூலம் மாதாந்தம் 100 ரூபா கடன்பத்திரகாரருக்கு மீளளிப்புச் செய்யப்படும்.
3. பெறப்பட்ட நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் குலுக்கலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.
4. கடன்பத்திரகாரர் இல்லாதவிடத்து மறு உரித்தாளருக்கு வழங்கப்படும்.

தமிழீழ மக்கள் அனைவரும் தமிழீழ தேசியநிதிக்கு உங்கள் முழுமையான பங்களிப்பைத் தரும்படி கேட்டுக்கொள்கிறோம். (ம)

## ஈரோஸ்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சால் தமிழ்மக்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் இனஅழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே இந்தப் பகிஷ்கரிப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக மேற்படி அமைப்பு தெரிவித்ததுடன்; தொடர்ந்து பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பதில் எவ்வித பலனும் இல்லை என்றும் தெரிவித்துள்ளது.

## பிரேமாவின் . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சும் இலங்கைத் தமிழர்கள் சிறிலங்கா அரசினால் படுகொலை செய்யப்படுவது குறித்துக் கவலை தெரிவித்திருப்பதுடன் இந்திய மத்திய அரசின் மீது கண்டனம் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 02 ஆம் தேதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.